








# திருக்கோயில்

ஆகஸ்ட் 1988 விலை ரூ. 3











முகப்பு

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழாக் காட்சிகள்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ ஆண்டு ஆவணித் திங்கள் ஆகஸ்ட் 1988 | விலை ரூ. 3-00 | மணி: 8

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

மயிலையில் நடைபெற்ற ஓதுவார் ஓய்வூதியத் திட்டத் தொடக்கவிழா

தட்சிணாமூர்த்தி
—டாக்டர் பருத்தியூர்சந்தானராமன்

கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்தவாரியார்

வல்லக்கோட்டையில் நான்கண்ட முருகன்
—எம். வி. அரங்கநாதன்

முழுமுதற்கடவுள்பிள்ளையார்
—த. அகரமுதல்வன்

பூம்பாவை யான்பெற்ற திருப்பாவை
—நிறைமதி

பிறன்மனை விழையாமை பற்றித் திருவள்ளுவரும் மகான்பசவரும்
—அருட்செல்வி

திருப்பாவை பாடிய திருப்பாவை
—வித்யாதீர்த்ததாசன்

நளமகாசரிதம்
—வே. தியாகராஜன்

படிக்கின்றிலை பழநித்திருநாமம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா
—செவ்வேள்

**இரண்டாம் மற்றும் நான்காம் அட்டைகள்:**

மேதகு பாரதப் பிரதமர் திருமிகு இராஜீவ் காந்தி பழநித் திருத்தலத்திற்கு வருகைதந்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

அறநிலையத்துறை அரசுச் செயலாளர் திரு கு. ஆறுமுகப்பிள்ளை, ஐ.ஏ.எஸ்., ஆணையாளர் திரு தி. இராச. கல்யாண சுந்தரம், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் பாரதப் பிரதமரை வரவேற்றனர்.

# மயிலையில் நடைபெற்ற ஓதுவார் ஓய்வூதியத் திட்டத் துவக்க விழா

தமிழகத் திருக்கோயில்களிலும் மடாலயங்களிலும் குறைந்தது 20 ஆண்டுக் காலங்கள் பணியாற்றி 60 வயது நிறையப் பெற்று வருவாய் வசதி இன்றி வாடும் ஓதுவார்களுக்குத் திங்கள்தோறும் ரூபாய் 250 ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை 29-6-88 அன்று அருள்மிகு மயிலை கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்ஸாண்டர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். கலைமாமணி லால்குடி சுவாமிநாதன் அவர்களின் கடவுள்வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் ஆன்றோர்கள் ஆற்றிய உரைகள் இங்கே 'திருக்கோயில்' வாசகர்களுக்காக தொகுத்து வழங்கப்படுகின்றன.

**அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர்**

**திருமிகு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,**

**அவர் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

பெருமைக்குரிய இந்த ஓதுவார் மூர்த்திகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் இத்திட்டத் துவக்க விழாவின் தலைவர் மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் அவர்களே! பெருமதிப்பிற்குரியமேதகு ஆளுநர் பெருமான் அவர்களே! அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! இங்குக் குழுமியிருக்கும் ஆன்றோர்களே !வணங்குவதற்குரிய ஓதுவாமூர்த்தி பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓதுவார் ஓய்வூதியத் திட்டம் தொடங்கப்படும் இந்நாள் தமிழக வரலாற்றிலே-சிறப்பாக அறநிலையத் துறை நிர்வாகத்திலே ஒரு மிக புனிதமான நாள்.

1988 பிப்ரவரி மாதம் 17-ஆம் நாளும் நாம் எல்லோரும் பெருமகிழ்ச்சி அடையும் ஒரு புனித நாளாக மலர்ந்தது. அன்று தான் லண்டன் ராயல் கோர்ட்டிலே, நம் தமிழகத்துப் பத்தூர் நடராஜர் சிலை நம்முடைய சிலை என்று தீர்ப்புக் கூறப்பட்ட நாள். அந்த நாளிலேதான் மேதகு ஆளுநர் அவர்களும் இங்குப் பதவியேற்றார்கள். வரும் பொழுதே ஒரு தெய்வீகத்தன்மையான வருகை அவர்களுக்கு அமைந்துவிட்டது.

மேதகு ஆளுநர் அவர்கள், இதற்குமுன் பதவியிலே இந்தியன் ஹைகமிஷனராக இங்கிலாந்திலே பணியாற்றியநேரம் மிகப்பெரும் முயற்சி செய்து, அந்த நடராஜர் திருவுருவச் சிலையை நமது என்று நீதி மன்றத்திலே மெய்ப்பிப்பதற்கு பாடுபட்டார்கள். தமிழகத்தின் பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும். தமிழகத்தின் கலாச்சாரம் காப்பாற்றப்பட வேண்டும்; தொன்மைமிகு கலைப் பொருட்கள் காப்பாற்றப்பட வேண்டும்; இப்படியெல்லாம் எண்ணி அவர்கள் பெரும் முயற்சி செய்து அந்த நீதிமன்றத்திலே சரியான தீர்ப்பு பெறுவதற்குப் பெரும் முயற்சி செய்து இரவு பகலாகப் பாடுபட்டார்கள். அதன் பலனை நாம் இன்று தமிழகத்திலே அடைந்திருக்கிறோம். விரைவிலே பத்தூர் நடராஜப் பெருமானின் திருவுருவம் இந்தியா வந்து சேர்ந்து சென்னைக்கு வரும்.

மேதகு ஆளுநர் அவர்கள் அதை மிகச் சிறந்த முறையிலே கொண்டு வந்து நன்னிலம் தாலுகாவிலே உள்ள அந்தப் பத்தூர் நடராஜப் பெருமான் கோயிலிலேயே அந்த நடராஜர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். நாம் அவருடைய அறிவுரையின் படியே அந்த நல்ல புனித காரியத்தை நிறைவேற்றுவோம் என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆன்மீகத் துறையில் மிக ஈடுபாடு கொண்ட பெருமகனார் இன்று நமக்கு மேதகு ஆளுநராக வீற்றிருக்கின்றார்கள். இரண்டு நாட்களுக்கு முன், பழநியம்பதியில் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நிகழ்ந்ததுஉங்கள் அனைவருக்கும்தெரியும். அதற்கு இடையறா முயற்சிகளை மேற்கொண்டு சரியான முறையிலே எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று பணித்து, அதற்கு வேண்டிய நிதி உதவிகளைப் பல்வேறு துறைகளுக்கும் நல்கி, ஆளுநர் அவர்களின் ஆலோசகர் அவர்களையும் பழநியிலேயே இருந்து அதை வெகு சிறப்பான முறையில் செய்ய வேண்டும் என்று ஏற்பாடுகளை எல்லாம் செய்தவர் நமது மேதகு ஆளுநரேஆவார். அவர்கள் இந்த விழாவில் பங்கேற்பது மிகமிகப் பொருத்தமாக அமைகிறது. ஆன்மீகத்துறையிலே எந்த ஒரு நல்ல காரியமானாலும் சரி., அது நம்முடைய இந்த சமயத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் சரி, ஹஜ் பயணிகளுக்கு வேண்டிய விமானப் பயண ஏற்பாடுகளைச் செய்வதானாலும் சரி, எல்லாவற்றையும் அவர்கள் நேரடியாகக் கவனித்து உடனுக்குடன் பிரச்சினைகளைத் தீர்த்துவரும் ஒரு பெரியவராக, வழிகாட்டியாக, நமக்கெல்லாம் அமைந்திருக்கிறார் என்றால் அதை நம்முடைய பெரும் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். அவர்களை வருக வருக என்று அறநிலையத்துறை சார்பாக இந்த விழாவிற்கு வரவேற்கிறேன்.

அடுத்து இந்தத் துவக்க விழாவிற்குத்தலைமை ஏற்கவிருக்கும் பெரியவர் நம்முடைய தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளராக இருந்தவர்; தற்பொழுது ஆளுநர் அவர்களின் ஆலோசகர் ஆக இருக்கிறார். அவர் தலைமைச் செயலராகப் பணியாற்றும்பொழுது நான் செயலராகப் பொறுப்பேற்றவுடனே நடைபெற்ற செயலர்கள் கூட்டத்திலே என்னைக் கேட்டார்கள்.

'தமிழகப் பாரம்பரியத்தையும் மரபுகளையும் வழுவாமல் பாதுகாக்க என்ன ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஓதுவாமூர்த்திகள் எல்லாம் பல்வேறு சிரமமான நிலையில் இருக்கிறார்களே! அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறீர்களா?'' என்று கேட்டார்கள். அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் பல்வேறு வகையான யோசனைகளையும் பல்வேறு வகையான திட்டங்களையும் வகுத்துத் தந்து, இதைச் சீரியமுறையில் செய்யப்பணித்ததற்கு அவர்களுக்கு எப்படித்தான் நன்றி சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மிகச் சிறந்த கவிஞராகவும் திகழ்கிறார்கள். பெரியமனம் படைத்தவராக விளங்குகிறார்கள். இந்த விழாவிற்கு வரும்போதுகூட ஓதுவார்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டிய அந்தக் கடமைபற்றித்தான் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள். அத்தகைய சிறந்த உள்ளம்படைத்த மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகரையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.

அடுத்து அறநிலையத்துறையின் ஆணையர் அவர்கள் பெருமுயற்சி எடுத்து, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் துணையோடு இந்தத் திட்டத்தை வெகுவிரைவில் செயற்படுத்துவதற்கு மிகுந்த முயற்சிகள் செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஓதுவார் மெய்வூதியத் திட்டத் துவக்க விழா சிறப்பாக நடைபெற ஆவனச் செய்துள்ளார்கள். அவர்களையும் நான் தனிப்பட்ட முறையிலே வருகவருக என்று வரவேற்று இங்குவந்துள்ள அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மெய்வூதியம் பெறும் ஓதுவாமூர்த்திகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் பெரும் பங்கு வகித்தவர், இசைப் பேரறிஞர்—தேவார மரபிலே வந்தவர், சாகித்திய அகாதமியின் பரிசு பெற்ற விற்பன்னர் திருவாளர் மீ. ப. சோமசுந்தரம் அவர்கள், தமது கண் ஆபரேசன் காரணமாக இவ்விழாவிற்கு வரமுடியவில்லை; அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

### மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர்

## திருமிகு ஆ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,

### அவர்கள் ஆற்றிய தலைமையுரை

அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய மேதகு ஆளுநர் அவர்களே! அறநிலையத் துறையின் செயலர் அவர்களே! அறநிலையத் துறையின் ஆணையர் அவர்களே! ஓதுவாமூர்த்திகளே! பெரியோர்களே! தாய்மார்களே!

அன்று ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இராஜராஜசோழன், ஓதுவா மூர்த்திகள் என்று பெயரிட்டு மூவர்கள் பாடிச் சென்ற தேவாரப் பொக்கிஷங்களை எல்லாம் முறையாகப் பாட, இன்னிசையுடன் பாட, அதைப் பக்தர்கள் எல்லாம் கேட்டு அவர்களுடைய குடும்பத்திலும் சமூகத்திலும் நல்லவிதமாய் வாழ வேண்டும் என்று இராஜராஜசோழன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பாடு செய்தான். இன்று இந்த நல்ல நாளிலே இராஜராஜ சோழன் என்று பெயர் இல்லை யென்றாலும், பெரிய மன்னன் பெயரைக் கொண்ட மேதகு ஆளுநர் டாக்டர் அலெக்சாண்டர் அவர்கள் இந்த விழாவிலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஒரு சரித்திரத்தைப் படைத்துக் காட்டியிருக்கிறார்கள்.

நம்முடைய அறநிலையத் துறை செயலர் அவர்களும் சொன்னார்கள்; நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் எப்படி அதிகக் கஷ்டப்பட்டு நம் தமிழகத்திலிருந்து திருடிச் செல்லப்பட்ட நடராஜப் பெருமானை அங்கே லண்டன் மாநகரத்திலுள்ள ராயல் கோர்ட்டிலே எப்படிப் பல மாதங்களாக வழக்காட ஏற்பாடெல்லாம் செய்து நமக்கு அந்த நடராஜர்சிலையைத் திரும்பப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பதைச் செயலர் எடுத்துக் கூறினார். ஆளுநர் அவர்கள் தமிழகத்திற்குவந்தநாளேசொன்னார்கள் ''அந்தநடராஜப் பெருமான் வரும்பொழுது அதைவரவேற்க தகுந்த பெரிய திருவிழா எல்லாம் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, நம் தமிழகத்தினுடைய கலை, மொழி, கலாச்சாரம் இவற்றிற்கெல்லாம் மென்மேலும் நாம் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று எங்களிடத்திலே அடிக்கடி நம்முடைய ஆளுநர் அவர்கள் சொல்லி வருவதோடு மட்டுமல்லாமல் அவைகளை செயற்படுத்தும் தம் விருப்பத்தையும் சில நாட்களுக்கு முன் நடந்த ஒரு கூட்டத்திலே அறிவித்ததை எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

கம்ப இராமாயணம், சங்க இலக்கியம் போன்ற பெரும் பொக்கிஷங்களை எல்லாம் ஆங்கிலத்திலும் மற்ற மற்ற மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல் சித்தர்கள் பாடல்களையும் மொழி பெயர்க்க வேண்டும் என்று அவர்கள் கூறி வருகிறார்கள்.

நான் அடிக்கடி கூறி வருவதைப் போல் சித்து என்றால் மிஸ்டிசிசம்; சித்தர் என்றால் மிஸ்டிக். இந்தச் சித்தர்களிலே பெரியவராக இருக்கிறவர் திருமூலர். திருமூலரின் திருமந்திரத்திற்கு முன்பு தமிழ்நாட்டிலே மட்டுமல்ல நம்முடைய பாரத நாட்டிலேயும்கூட ஒரு நல்ல நூல் கிடையாது. திருமூலரின் பாடல்களைக் கொண்டும் அவருக்குப் பின்னால் தமிழகத்திலே தோன்றிய பிற சித்தர்களின் பாடல்களைக் கொண்டும்தான், மற்ற மாநிலத்திலேயும் பல சித்தர்கள் ஞானிகள் எல்லாம் உருவாகியிருக்கிறார்கள் என்பது வரலாறு நமக்கு காட்டும் உண்மைகள்.

அத்தகைய தமிழ்நாட்டுச் சித்தர்களின்பாடல்களை எல்லாம் நாம் அறிந்து நாம் மட்டுமே பாடிக் கொண்டிருந்தால் போதாது. அந்தப் பாடல்களை மற்ற நாட்டினரும் அறிய வேண்டும். அறிந்து பயன் பெற வேண்டும். இந்தச் சித்தர்கள் பாடல்களை மொழி பெயர்க்க வேண்டும்; ஆராய்ச்சியும் செய்ய வேண்டும். இத்திட்டங்களுக்கு என்ன செலவானாலும் சரி, நாம் உடனே அதை எடுத்துச் செய்தாக வேண்டும் என்பதையும் மதிப்பிற்குரிய நமது மேதகு ஆளுநர் அவர்கள் எடுத்துரைத்து வருகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள்.

மூன்றாவதாகத் தஞ்சையில் சரசுவதி மகால் நூல் நிலையம் இருப்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பு ஓலைச் சுவடிகளில் நம்முடைய பெரியவர்கள் ஞானிகள் எல்லாம் அவர்களுடைய அறிவுத்திறன் மட்டுமல்ல, ஆன்மீகத் திறனையும் ஒன்றாகச் சேர்த்து அதிலே எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். இன்றும் பல ஓலைச்சுவடிகளில் என்ன இருக்கிறது என்பதை எல்லாம் நாம் அறிந்து கொள்ளாமல்தான் இருக்கிறோம். இந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் எடுத்து ஆராய்ந்து ஆராய்ச்சி செய்வது மட்டுமல்ல; மற்ற மொழிகளிலும் மொழி பெயர்த்து மற்றவர்களுக்கும் நாம் கொடுக்கவேண்டும், அவர்களும் அறிய வேண்டும் என்ற இந்த அரிய கருத்தையும் நம்முடைய மேதகு ஆளுநர்

அவர்கள் எடுத்துக் கூறி வருவதை நீங்கள் எல்லாம் கேட்டிருப்பீர்கள். இவற்றிற்கான ஏற்பாடுகளையும் அதிவிரைவிலே செய்து முடிக்க வேண்டும் என்று ஆளுநர் தம்மைகப்பட எனக்கொரு குறிப்பும் கூட எழுதி அனுப்பியிருக்கிறார். அவற்றிற்காக என்ன செயற் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும என்பதை நான் நம்முடைய செயலர், மற்றவர்களை எல்லாம் அழைத்து நான் இன்று காலையில்கூடப் பேசி வந்திருக்கிறேன். இந்த மூன்று திட்டங்களையும் அதிவிரைவில் நம்முடைய ஆளுநர் அவர்களையே வைத்து ஆரம்பிக்க வேண்டும என்பது என்னுடைய ஆசை.

இங்கே ஓதுவாமூர்த்திகள் எல்லாம் இருக்கின்றீர்கள். நீங்கள் நல்லதை ஓதுகிறீர்கள். ஆன்மீகத்தை ஓதுகின்றீர்கள். மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்ற விருப்பத்தோடு ஆண்டவன் சந்நிதியில் பெரியவர்கள் பாடிச் சென்ற பாடல்களை எல்லாம் ஓதுகின்றீர்கள். உங்கள் மூலமாக ஏற்படுகின்ற நன்மைகளைப் பெறுகிற மக்களும், உங்கள் மேன்மைக்கு அவசியம் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்களின் கருத்து. ஒரு காலத்திலே நாயன்மார்கள் எல்லாம் மக்கள் மத்தியிலே பாடினார்கள். ஈஸ்வரனைப் பாடினார்கள். அப்படி மக்கள் மத்தியிலே நாயன்மார்கள் பாடியிருந்தாலும், இவைகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி ஆண்டவன் சந்நிதியிலே பாட வேண்டுமென்று அன்று இராஜராஜன் ஏற்பாடு செய்தான். அம்மாதிரியே பாடி வருகின்ற ஓதுவாமூர்த்திகளாகிய உங்களுக்குப் பிற்காலத்திலே சமூகப் பொருளாதார சூழ்நிலை காரணமாக நிலைமை சற்றுநலிந்து கஷ்டமான நிலைமை ஏற்பட்டது. அம்மாதிரி நலிந்திருக்கின்றவர்களுக்கு நல்லதைச் செய்யவேண்டும் என்ற நல்ல கருத்தைக் கொண்டுதான் நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்தார்கள்.

இன்று நம்முடைய செயலர் அவர்கள் 63 ஓதுவார்களுக்கு ஒய்வூதியம் கொடுப்பதற்காக உத்திரவு போடப்பட்டுள்ளது என்று கூறினார்கள். எவ்வளவு நல்ல காரியம் பாருங்கள்! 63 நாயன்மார்கள் இந்தநாட்டிலே இருந்தார்கள். இன்று இந்த நல்ல நாளிலே நம்முடைய ஆளுநர்அவர்கள் கையாலே 63 ஓதுவாமூர்த்திகள் ஒய்வூதியம் பெறுகிறீர்கள்.

ஓதுவாமூர்த்திகளைப் பற்றிப் பேசுவது என்றால் மணிக்கணக்கில் பேசலாம். அடிக்கடி நான் சொல்லுகிற மாதிரி ஓதுவாமூர்த்திகளுடைய குடும்ப வாழ்க்கையிலே ஏழ்மை இருக்கலாம். ஆனால் அவர்கள் பாடுகின்ற பாடல்களிலே ஏழ்மை கிடையாது. எப்பொழுதுமே உயர்ந்த கருத்துகள் தான் உண்டு. உங்கள் உள்ளம் உயர்ந்த உள்ளம். அதனால் எவ்வளவுதான் வறுமை இருந்தாலும் உங்களுடைய ஆன்மீக உள்ளத்தினாலே இதை ஆயிரம் ஆண்டுகளாக நீங்கள் இதைத் தொடர்ந்து ஓதி வருகிறீர்களே! இதற்கு இங்கு இருக்கிற நாம் மட்டுமல்ல. நாட்டிலே உள்ள அத்தனை மக்களும் உங்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த ஒய்வூதியத் திட்டம் மட்டுமல்லாமல் தற்போது வேலையிலிருக்கின்ற ஓதுவார்களுக்கும் ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டாண்டிற்கு ஒருமுறை ஊதிய உயர்வு தரவேண்டும் என்று நான் அரசுச் செயலாளர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன். நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களும் ஓதுவார்களுக்கு ஆண்டுதோறும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்கள். ஆகவே ஓதுவார்களுக்கு இன்னும் எவ்வளவோ நாம் செய்ய இருக்கிறோம்.

ஆகவே இன்றைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் ஓதுவார் ஒய்வுதியத் திட்டத்தைத் தொடங்கிவைத்துள்ளார்கள். ஓதுவார்களுக்கு ஊக்கம் அளிப்பதானது இத்துடன் நின்று விடாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். நமது மேதகு ஆளுநர் அவர்கள் இன்னும் வேறு பல திட்டங்களையும் அறிமுகப்படுத்த எண்ணியிருக்கிறார்கள் என்பதை கூறி இங்கு வருகை தந்திருக்கிற உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வணக்கத்தையும் பாராட்டுகளையும் கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

## Speech Delivered by
## His Excellency the Governor
# Dr. P. C. Alexandar

Mr.Padmanabhan, Ladies and Gentlemen,

I am sorry-I have to speak to you in English. I have not yet reached the level of confidence when I can make an off-hand speech in Tamil. Mr.Padmanabhan and Mr. AludiaPillai mentioned to me several times about the importance of the ceremony of this function. I myself asked them, how, the pension scheme is going to be received by this Community of Oduvars and how the public also will be viewing the Pension Scheme. But seeing so many of you present here, looking at your status, looking at your simple attire, your beads around your neck, the jasmine garlands around you, your simple attire, the vibuti on your forehead really fills my heart with great pleasure. Because I see in you, really the people, who are a chain in their glorious heritage, a heritage which goes back to several centuries in this State. You are a precious chain in that heritage and it is in our interest to see that this chain is never snapped and this chain is carried forward. From as far back as the 7th and 8th centuries after Christ-many things would have existed before that -but it was in the 7th and 8th centuries that a major change took place in the history of Hinduism in our country. Upto about 7th Century, the focus was on devotion with a lot of ritualism also. But you find from the 7th Century onwards, in Tamil Nadu a new development, which was wonderful I could better say, institutional development in religion. Four major changes took place after the 7th century over a period of three and a half to four centuries in Tamil Nadu.

The first was the establishment of the institution of Vidyapiths, centres of learning. Till then, learning or knowledge, which remained a part of an oral tradition, had to be institutionalised through the instrument of training. And so the great founders, The great religious fonders of the South, particularly in Tamilnadu, established the institution of Vidyapiths, which made a remarkable change in the whole propogation of knowledge, which was confined only to oral tradition. That was the first change.

The second change was the establishment of a new type of institution, called "Mutt'. The institution of 'Mutt' in those days started as really a

hostel or a hall, where trainees should come, live together, hear the scriptures, learn them, not merely to recite but to write,annotate and explain them to the people outside. If you go through some of the great archacological, epigraphical evidences available about the century, you would find that each mutt had a number of villages attached to it. There were big celebrated mutts, which had even four to five thousand villages attached to it. In other words they were not merely hostel or halls for the preservation of knowledge in the precincts of the hall but they were institutions for determination of religious knowledge and spiritual awakeningto a large number of villagers associated with them. That was second major development after the 7th Century.

The third major development was the establishment of big temples that we see them today. Not that there were no temples before the 7th century; Ancient temples go back to centuries before Christ. But huge complexes, which will be centres of devotion and the spread of religious knowledge and sources of inspiration, came to be built up during these three centuries. If you find, if you look at the history of some of these famous temples, you will be amazed to see a large degree of synchronisation, many of them on the top of great hills, some of them which could be on top of hills and the Gopuras built around creating in the minds of the devotees that celestial quest of divinity and spiritualism. In all these temples of that period you will find, as you enter, inscriptional, epigraphical and sculptural representations on the great epics Mahabharatha and Ramayana. The most important events of Mahabharatha and Ramayana, you will find in the form of sculptures as the devotees enterthe temple, which is to remind them of the great spiritual values for which the temples were established. Also, the importance of these temples, during this period was, that they did not merely look into the spiritual or devotional part of a man's life. They cared equally for scientific, artistic, architectural and even physical development of the citizen. The temple architecture, the whole science of iconography, the whole science of sculpture, developed during this period. You find huge halls which can feed thousands of people at a time, which shows that these halls were intended to feed, places of discourses, debates, lively exchange of views and thereby centres where knowledge could be really churned out of human mind and you find during this period the rise of big institution of temples. I repeat there were temples from centuries before Christ but in this period, the institution of temples which conveyed to the people the idea that man and Godare linked together through Religion or worship is the vehicle for linking man with God. That came into prominence during this period.

And, the fourth, institution, which was developed during this period, was the institution of endowments for protecting spiritual knowledge and religious heritage. Kings, Chieftains, Zamindars, rich people at that time came forward to make large endowments so that the culture of the religious and spiritual heritage could be preserved not only for that period but for the succeeding generations. That is where, you find some of the most important archacological and epigraphical,inscriptional evidences about the Oduvars. But Mr .Padmanabhan referred to the great Chola Prince, Chola King, Raja Raja, the Great. In his time, large endowments were made for the benefit of the Oduvars in recognition of the great services they were providing to the temples at that time. We find several endowments for preservation of worship in a temple, for training of priests in a temple,for pilgrimages, institution of pilgrimages, for certain fixed dates on celebration of festivals all these came out during this period.

Thus we find these four institutions, which played a very prominent and important role in the propagation of the faithand the preservation ofessential features of Hinduism overa period of three and a half to four centuries after the 7th century.That is why we are today able to meet them in this heritage, If the people,were not taking the trouble of institutionalising the spiritual fund of knowledge and if theyhad not really provided with the support for them, probably some of these traditions would have been lost or would have disappeard. Our gratitude to the people of that generation, who had the far sight to have this institutional approach in Tamil Nadu to preserve the spiritual and religious heritage of this State. Even today, you will read in the newspapers, how much of special heritage is being just actually dugup. Some body goes and digs up a piece of ground for building a house and lower in the ground, out comes an image or sculptural piece belonging to centuries past, which shows, the richness of the heritage that still remains intact. We have only seen part of it so far. Great work has been done by the Archacological Department of Tamil Nadu. I have greatest admiration for these who have done pioneering work in the Archacological Department of this state. But the fact that we are able to find very ancient, very precious, valuable, sculptural pieces, even today, by accident, shows that this land, remains tobe explored further about this ancient past.

Mr. Aludia Pillai referred to my humble interst in getting the Nataraja Idol back to our State. Of course, at that time, I never know I would ever come back to this State and be in a position to talk to you about this. But, as a proud citizen of India, I felt mortified with the fact that such a precious piece, which was the object of worship ,which had been very clearly established by experts as an object of worship for centuries, could be just taken away by some theives and sold for a few thousands of pounds and this really made my blood boil. And that is why we had the courage to engage one of the top-most legal Luminaries in England at that time to take up our cause one of the top leaders of the Bar argued for this case. It was not merely the case of this particular image.This would establish a case-law, by which we can get back several such images. The imporance of this judgment lies in the fact that once the appeal period is over which will be in a few

days' time this will constitute a major case-law by which we can quote this and get back several other objects which had been the objects of worship in our country, which literally ordinary thieves-I cannot find any other name for them just pilferred, stole and sold for a sum. As AludiaPillai said, I am looking forward with great enthusiasm to the day and I will go to Meenambakkam Airport along with my colleagues and bring that image with a right royal welcome back to Tamil Nadu. I am mentioning this to show what a precious heritage we have in this State, and how much more has to be unearthed and brought to light.

Mr. Padmanabhan mentioned about the Padalgal and the need for translation of them into other languages, the need for a good translation of Kambaramayanam into English itself. In my long discussions with him, every time I get an opportunity because of my interest in Tamil Language and culture, I accept his great authority on this subject and ask him about the areas where we can really do something which will have a lasting effect. In fact, it was his suggestion to me that if we can get the songs of the Siddhas properly translated, edited and researched and published, it will be a very lasting contribution not only to Tamil Language and literature but to religious learning as I told the whole range of mysticism which has developed around the world as a whole. We have taken certain steps inthat direction and I am sure over a period of time, the results will show themselves out.

In conclusion, let me assure you, though in English -actually you will understand the sincerity of my words-we consider you as very important source of service for Tamil culture andTamil heritage. You have preserved it over generations and we want that this heritage and this tradition should not be only preserved upto this generation but handed over to the next generation. What/we are doing today is just a token. The amount is very small but behind this small amount, there is really genuine commitment. My congratulations once again to the community of Oduvars and, I repeat, I feel extremely happy-very very pleased to see you all.

**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர்**

**திரு. தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்.,**

**அவர்கள் ஆற்றிய நன்றியுரை :**


ஏழிசையாய் இசைப்பயனாய்த் திகழ்கின்ற எல்லாம் வல்ல பரம்பொருளை நாளும் இன்னிசையால் ஓதி வழிபடும் ஓதுவா மூர்த்திகளுக்கெல்லாம் பொற்காலம் இக்காலமே ஆகும்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர் அவர்கள், இன்று ஓதுவார் ஒய்வூதியத் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஓதுவாமூர்த்திகள்பால் தமக்கும் தமிழக அரசிற்கும், நம் அறநிலையத்துறைக்கும் உள்ள பெருமதிப்பினைப் புலப்படுத்தி உள்ளார்கள். அவர்கள் தமிழகத்தின் ஆளுநர் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் இந்திய ஹைகமிஷனராக இலண்டனிலே வீற்றிருந்த போதும் நம் தமிழகத்தின் கலை பொக்கிஷமான பத்தூர் நடராஜர் சிலையை மீட்பதற்குப் பேருதவி புரிந்துள்ளார்கள். விலைமதிப்பற்ற அச்சிலை வீணர்சிலரால் களவாடப்பட்டு கனடாவில் உள்ள பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுக்கு விற்கப்பட்டு லண்டன் மியூசியத்தில் இருந்தபோது அச்சிலையை மீட்க நம் தமிழக அரசும், மத்திய அரசும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டன. அப்பொழுது லண்டன் ஹைகமிஷனராக இருந்த நமது மேதகு ஆளுநர் அவர்கள் நம் அறநிலையத்துறையின் பணிகளுககு தங்கள் பொன்னான ஒத்துழைப்பை வழங்கி அச்சிலையை மீட்டுத் தந்து பேருதவி புரிந்துள்ளார்கள். அத்தகைய உறுதிசான்ற, பெருமை சான்ற மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் ஓதுவார் ஒய்வூதியத் திட்டம் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மேதகு ஆளுநர் அவர்களுக்கு உங்கள் தூய நெஞ்சங்கள் வாழ்த்தும் வாழ்த்தினை நான் அன்போடு காணிக்கையாக்கி அறநிலையத்துறையின் சார்பில் என் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்கள் அதே போல் அவர்கள் தலைமைச் செயலராகஇருந்தபோதே அறநிலையத் துறையின் சார்பில் நடத்தப்பட்ட இரண்டு மாத கால ஓதுவார் புத்தொளிப் பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டு ஓதுவா மூர்த்திகள் பால் தங்களுக்குள்ள பேரன்பைப் புலப்படுத்தினார்கள்.

**"Even God will be afraid to go before a starving person"** "பசியோடு இருப்பவன் முன்னே கடவுளும் வரப்பயப்படுவார்" என்ற காந்தியடிகளின் மேற்கோளை எடுத்துக் காட்டிய அவர்கள் ஓதுவார்களுக்கான நல்ல பல திட்டங்களை அரசு ஆலோசித்து வருகிறது என்றும் அன்றைய தினம் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் அவர்களே ஓதுவார் ஓய்வூதியம் வழங்கப்படும் இவ்வினிய திட்டத்தின் தொடக்க விழாவிற்குத் தலைமைதாங்குவது மிகவும் பொருத்தமானஒன்று. அவர்களுக்கும் அறநிலையத்துறையின்சார்பில் என் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓதுவார்கள் ஓய்வூதியத் திட்டத்தை அரசிற்கு பரிந்துரைந்து இவ்வொப்பற்ற திட்டம் இன்று மேதகு ஆளுநர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படுவதற்கு மூல முதற் காரணமாக இருப்பவர் நம் அறநிலையத்துறையின் செயலாளர் திரு கு. ஆளுடையபிள்ளை அவர்களே ஆவார். 'நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தன்' என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருஞான சம்பந்தரைப் போற்றியுள்ளார்கள். திருஞான சம்பந்தருக்கு ஒருமறு பெயர்தான் ஆளுடையபிள்ளை என்பது. வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க அன்றைய தினம் எப்படி ஆளுடைய பிள்ளை அரும்பாடுபட்டாரோ அப்படி இன்றைய தினம் அறநிலையத் துறையின் புகழ் ஓங்க அறநிலையத்துறையின் செயலாளர் நமது ஆளுடைய பிள்ளை அவர்களும் எங்களை மிக ஊக்கப்படுத்தி வருகிறார்கள். அவர்கள் இன்றைய தினம் இவ்விழாவிற்கு வரவேற்புரை வழங்கியும் சிறப்பித்தார்கள். அவர்களுக்கும் அறநிலையத்துறையின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. இவ்வினிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த ஓதுவாமூர்த்திகள், ஆன்றோர்கள், சான்றோர்கள் அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




உமையன்னை தட்சன் மகளாகத் தோன்றி வளர்ந்ததால் 'தாட்சாயணி' என்று அழைக்கப் பட்டாள். 'சதிதேவி' என்ற அவளது இயற் பெயர் காலப்போக்கில் மாறிவிட்டது. சிவனை அவமதித்து வேள்வி நடத்திய தட்சனின் பெண் என்பதனை நினைவுபடுத்தும் வகையில் தாட்சா யணி என்ற பெயரே எங்கும் பிரபலமாய் இருந்தது. அதனை மாற்றிக் கொள்ள எண்ணினாள் அன்னை. இறைவனை வலம்வந்து வணங்கி தனது கருத் தினைக் கூறினாள். நன்றென மகிழ்ந்த இறை வனும் "உனது குழந்தைகளான உயிர்களுக்கு நல்லவே எண்ணி நீ இதனை மொழிந்தாய். அப்பெயர் மாறும் வண்ணம் இனி நீ செயற்பட லாம்; எமது பக்தனாகிய இமவான் என்னும் மலை யரசன் உன்னைப் பெண்ணாக அடைய வேண்டித் தவமியற்றுகிறான். அவன் தவமியற்றும் இடத் துக்குச் சென்று சிறு குழந்தையாகக் கிடப்பாயாக" எனப் பணித்தான்.

இமவான் காணும்படி பொய்கையொன்றில் ஆயிரம் இதழ்கள்கொண்ட தாமரை மலர்மீது அம்பிகை சிறு குழந்தையின் வடிவத்துடன் கிடந் தாள். இமவானால் எடுத்து வளர்க்கப்பட்டாள். பின் இறைவன் கூறியிருந்தபடி ஐந்தாண்டு நிறைந்தவுடன் தவமியற்றத் தொடங்கினாள். பர்வதராஜ (மலையரச) னுக்குப் பெண்ணாகத் தோன்றியதால் அவள் பெயர் பார்வதி என்று வழங்கலாயிற்று.

அம்பிகை பார்வதியாகி தவமியற்றிய அதே நேரத்தில் தான் இறைவன் 'அறமுரைத்த பட்ட னாக' ஆலின் கீழ் அமர்ந்து தட்சிணாமூர்த்தியாக விளங்கினான்.

சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு முனிவர்களும் வேதம், ஆகமம், சாத்திரம், புராணம் முதலான ஞான நூல்கள் பலவற்றையும் முறைப்படி நன்கு கற்றனர். சான் றோர் பலரிடம் பாடம் கேட்டுக் கேள்வியறிவும் பெற்றனர். அவர்களைச் சனகாதி முனிவர்கள்' என்று குறிப்பிடுபவர். சனகர் முதலான முனிவர் கள் என்பது அதன் பொருள். திருக்கயிலைசென்று இறைவனை நேரில் கண்டு தரிசிக்கும் பேறு பெற்ற வர்கள் அம்முனிவர்கள். அவர்கள் கற்றுப்பெற்ற நூலறிவும் கல்வியறிவும் அவர்களுக்கு ஞானத் தெளிவினைத் தரவில்லை. மெய்ப்பொருள் என்ன வென்பதும் உண்மைத் தத்துவந்தான் என்ன என் பதும் அவர்களுக்கு விளங்கவில்லை.

"தாம் அறிந்ததே உண்மைத்தத்துவம், அதுவே அனைவரும் பின்பற்ற வேண்டிய சித்தாந் தம்" என்று அன்றும் இன்றும், என்றும் சிலர் எண்ணுகின்றனர். இறைவனைப் பற்றிய உண்மை நிலையினை முழுவதுமாக எவரும் அறிந்ததில்லை. எனவே தான் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் "ஊழ்கொண்ட சமயத்தன்னார் உருவுகண்டாரை ஒத்தார்" என்றான்.

'சனகாதி முனிவர்கள் கல்வி கேள்விகளில் வல்லவர்களாக இருந்தார்கள். ஆனாலும் தாங்கள் உண்மைத் தத்துவத்தை உணரவில்லை என்ப தனை வெளிப்படையாக ஒத்துக்கொண்டனர். அதனைத் தெரிந்து தெளிந்து கொள்ளும் முயற் சியிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். இறைவனை நாடினர். அவனும் உரிய நேரத்தில் உபதேசிப்பதாக அருளியிருந்தான்.

அம்பிகை பார்வதியாகித் தவமியற்றிய பொழுது தானும் யோக மூர்த்தியாகி அவர்களுக்கு உபதேசிக்க எண்ணினான். கயிலை மலைச்சார லில் கல்லால மரத்தின் கீழ் சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் உபதேசிக்கத் திருவுள்ளம் கொண்டு நந்தியம் பெருமானைக் காவலாக வைத் தான். யோக மூர்த்தியாகி உண்மைநிலையினை உணர்த்தும் பொழுது காமன் ஒருவனைத்தவிர வேறு எவரையும் அனுமதியாதிருக்கும் படியும் கட்டளையிட்டான்.

கல்லால மரத்தின் கீழ் காலொன்றினைப் பிடித்து, பிறிதொன்றினைத் தொங்கவிட்ட நிலை யில் அமர்ந்து வலக்கரத்தினால்சின்முத்திரைகாட்டி உண்மைநிலை உணர்த்தினான். "தெற்கே செல் லும் மரணயாத்திரை செல்லாது சரணயாத்திரை யாக வடக்கே வாருங்கள்" என்று உணர்த்த, தான் தட்சிண (தெற்குத்) திசைநோக்கி அமர்ந்த தால் தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்பட்டார். சின்முத்திரையினைக் கண்ட சனகாதிமுனிவர்கள் உள்ளத் தெளிவு பெற்றனர். பொதுவாக கல்விக் கூடங்களில் மாணவர்கள் சிறியவர்களாகவும் ஆசி ரியர் மூத்தவராகவும் இருப்பர். அங்கு ஆசிரியர் பேசுவார். ஆனால் இறைவன் நடத்திய இப்பள்ளி யோ புதுமையானது. புரட்சிகரமானது. இவ் வாறு வடமொழி சுலோகமொன்று வருணிக்கிறது.

ஆம்! இளமையழகுடன் இங்கு இறைவன் வீற்றிருக்கிறான்! அவனது மாணவர்களாகிய சனகாதி முனிவர்களோ பல்லாயிரம் ஆண்டுகள் முதிர்ந்த வயோதிகர்கள். இறைவனோ எதுவும் பேசவே இல்லை! அந்த மௌனத்தின் பயனாகவே மாணவர்களின் ஐயப்பாடுகள் அனைத்தும் நீங்கி விட்டன!

அப்படி அவன் என்னதான் உணர்த்தினான்! அவன் காட்டிய சின்முத்திரை என்னும் அடை யாளம் வலக்கரத்தின் மூன்று விரல்கள் (சுண்டு, மோதிர, நடு விரல்கள்) மேலே உயர்ந்து நிற்கும் நிலையில் காணப்படும். ஆட்காட்டிவிரல் கட்டை விரலின் (பெருவிரலின்) அடியுடன் இணைந்திருக் கும்.

இறைவன் 'பதி' எனப்படுவான். உயிர்கள் அனைத்தும் 'பசுக்கள்' எனப்படும். பசுக்களுக்கு இயல்பாகவே மூன்று குற்றங்கள் உண்டு. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. அவற்றினை விடுத்து உயிர்கள் பதியான இறைவனை அடைதல் என்பதே உண்மையாக என்றுமுள்ள தத்துவம். உயர்த்திய மூன்று விரல்கள் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றினைக் குறிக்கின்றன. பெருவிரல் பதியாகிய இறைவனையும் ஆட்காட்டிவிரல் பதியினை அடையும் பசுக்களையும் குறிக்கின்றன.

முப்புரிநூல் என்னும் பூணூலும் இச்சின் முத்திரையின் தத்துவத்தையே உணர்த்தும் சின்னமாகும். எட்டுச் சாண் நீளத்துடன் மூன்று புரிகளாக ஒரு முடிச்சுடன் தயாரிக்கப்படுவது பூணூல். எண்சாண் உடம்பில் மும்மலங்கள் உள்ளன. அவை நீங்கும் வரை பிறவி என்னும் முடிச்சு உண்டு என விளக்குவதே பூணூல்.

இராமாயணத்தில் இராவணன், கும்பகருணன், வீடணன் என மூவர்!

கந்தபுராணத்தில் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என மூவர்.

அம்பிகை நூலாகிய 'லலிதோபாக்யானத்தில் பண்டாசுரன், விஷங்கன், விசுக்ரன் என மூவர்.

இப்படி, இதிகாச, புராண உபபுராணங்களில் அசுரசகோதரர்கள்-மூவராகவே காணப்படுகின்றனர்.

சின்முத்திரையின் உயர்த்திய விரல்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பவற்றைக் குறிக்கவே அவர்கள் (அசுர சகோதரர்கள்) மூவராகவே காணப்படுகின்றனர்.

இராவணன், சூரன், பண்டன் ஆகியோர் ஆணவமலத்தின் பிரதிநிதிகள்.

கும்பகருணன், சிங்கமுகன், விஷங்கன் ஆகியோர் கன்ம மலத்தின் பிரதிநிதிகள்.

வீடணன், தாரகன், விசுக்ரன் ஆகியோர் மாயாமலத்தின் பிரதிநிதிகள்.

இராமனும், முருகனும், அம்பிகையும்முறையே இக்காவியங்களின் ''பதிகள்''.

அப்பதிகளைச் சரணடைந்த தேவர், முனிவர், மனிதர் ஆகிய அனைவரும் பசுக்கள் ஆவார்கள். இவ்வாறு புராண இதிகாச வரலாறுகள் அனைத்தும் தட்சிணாமூர்த்தி காட்டிய சின்முத்திரையினைச் சுற்றி இயங்கிய செய்திகள் ஆகும்.

எல்லாச் சிவாலயங்களிலும், தட்சிணாமூர்த்தி, சுவாமி சந்நிதியின் தெற்குப் புறத்தில் தெற்கு நோக்கியே அமர்ந்திருப்பார். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன், நான்கு முனிவர்கள் எதிரில் அமர்ந்திருக்க கண்மூடிய மௌன நிலையில் வீற்றிருப்பார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளாலும் இறைவனை அடையலாம் என்பதனைக் குறிப்பால் உணர்த்துபவர்கள் அம்முனிவர்கள். மார்க்கங்கள் மாறுபட்டாலும் இறுதியில் சென்று சேருமிடம் இறைவனின் திருவடி நிழலே என உணர்த்த சனகாதி முனிவர்கள் நால்வரும் ஒருசேர இறைவன் திருவடி நிழலில் அமர்ந்திருக்கின்றனர்.

இறைவனின் வலக்கரம் சின்முத்திரைகாட்டும். இடக்கரம் சுவடி ஏந்தியிருக்கும். மேலேயுள்ள வலக்கரத்தில் ஜெபமாலையும், இடக்கரத்தில் மழுவும் இடம் பெற்றிருக்கும்'.

தொங்கவிட்ட பாதத்தின் கீழ் முயலகன் என்னும் அசுரன் இருப்பான். அவன் அஞ்ஞானம் என்னும் அறியாமையின் சின்னம்.

தட்சிணாமூர்த்தியே ஆதிகுரு, ஜகத்குரு அனைத்தும் ஆவார். எனவே அவரை குருமூர்த்தி எனவும் அழைக்கிறோம். நவகிரகத்தில் இடம் பெறும் குருபகவான்' இவர் அல்ல என்பதனைத் தெளிவாக உணர்தல் வேண்டும். எனினும் பிரகஸ்பதி என்னும் குருபகவானுக்குரிய வியாழக் கிழமைகளில் வழிபடுவோருக்கு அருள்பாலிப்பவர் தட்சிணாமூர்த்தி.

தட்சிணாமூர்த்தியை வழிபடுவோர் கல்வியும் ஞானமும் பெற்றுப் புகழுடன் வாழ்வார்கள் என்பது பலரது அனுபவபூர்வமான கருத்து. ஏற்ற குரு கிடைக்கப் பெறாதவர்கள் இவரையே குருநாதராகக் கருதினால் குருவழி எய்தும் மேன்மைகள் அனைத்தும் எய்தலாம்.

அல்லற்படுத்தும் கோள்களிலிருந்து தப்ப தட்சிணாமூர்த்தியை வழிபடுமாறு சோதிடர்களும் சான்றோர்களும் ஆற்றுப்படுத்துவதுண்டு.

'ஆலின் கீழ் அமர்ந்தான்' என்றும் 'ஆலமர்ச்செல்வன்' என்றும், 'அறமுரைத்த பட்டன்' என்றும் சைவத் தமிழ் இவரைக் குறிப்பிடுகிறது.

வீணை மீட்டிய கோலத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தியை 'வீணாதர தட்சிணாமூர்த்தி' என்பர். இவரே முதன் முதலில் வீணையை உருவாக்கி இசைத்துப்பின் தனது சகோதரியான கலைமகளிடம் அவ்வீணையினை அளித்துவிட்டார் என்பர்.

சென்னையை அடுத்த திருவொற்றியூரில் 'பத்மாஸன' நிலையில் அமர்ந்த தட்சிணாமூர்த்தியின் சிற்பம் இருக்கிறது.

ஆதிசங்கரர் தட்சிணாமூர்த்தியைப் புகழ்ந்து 'தட்சிணாமூர்த்தி அஷ்டகம்' என்று எட்டு சுலோகங்கள் கொண்ட தோத்திரம் இயற்றியிருக்கிறார்.

தமிழில் தாயுமான சுவாமிகள் சிரகிரி என்னும் திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண்டுள்ள தட்சிணாமூர்த்தியின் மீது பதினொரு அரிய பாடல்களை இயற்றியிருக்கிறார்.

''சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணாமூர்த்தியே!
சின்மயானந்த குருவே!''

என்று அப்பாடல்கள் நிறைவடைகின்றன.

''தட்சிணாமூர்த்திரூபிணி, சனகாதிசமாராத்யா'' (தட்சிணாமூர்த்தி வடிவினள், சனகாதி முனிவர்களால் வழிபடப்பட்டவள்) என்றும் அம்பிகையினைப் போற்றும் இலலிதாசகஸ்ரநாமம் உரைக்கிறது.

தாயுமானவர் பாடலும் அதே கருத்தினை ''சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே'' எனக் குறிப்பிடுதல் ஒப்பு நோக்கத்தக்கது.

''கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
யாறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனைஇருந்த
படி இருந்துகாட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைத்து, பவத்தொடக்கை வெல்வாம்''

என்ற இப்பாடல் அனைவரும் எளிதில் பாராயணமாய் ஓதிட ஏற்றது.

***

# கந்தவேள் கருணை



**திருமுருக கிருபானந்த வாரியார்**

[8]

முருகப்பெருமான் சரவணப் பொய்கையில் திருவிளையாடல் புரிந்துகொண்டிருந்தபோது சிவ பெருமான் உமாதேவியாரை நோக்கி ''உமையே! முன்பு நம் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிச் சரவணப் பொய்கையில் வளரும் உன் குமாரனை நாம் இங்கே கொண்டு வருவோம், வா' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட அகிலாண்டநாயகி உவகையும் அன்பும் கொண்டாள். ''எம்பெருமானே! நமது அருமைப் புதல்வனை நாம் இங்கு கொண்டு வருவோம். எழுந்தருளுக'' என்று கூறினாள். சிவபெருமான் எம்பிராட்டியுடன் இடபமீது ஏறியருளினார். அதுகண்ட தேவர்கள் ''நம்முடைய தீவினைகளெல்லாம் கழிந்தன'' என்று உளம் உவந்து போற்றித் துதித்தார்கள். ஆலால சுந்தரர் முதலிய கணத்தவர்களும் உருத்திரர்களும் வந்து இருபக்கமும் நெருங்கித் துதித்தார்கள். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரி பெய்து திருவடிகளை வணங்கிக் கொண்டு புடை சூழ்ந்தனர். பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழங்கினார்கள். நான்கு வேதங்களும், பிரணவமும் பல கலைகளும் ஒலித்தன! விஞ்சையர்கள் கீதம் பாடினார்கள். சந்திர சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள். பூதர்கள் சாமரம் வீசினார்கள். நூறுகோடி கணங்கள் சூழ்ந்தார்கள். இடபக் கொடிகள் நெருங்கிச் சென்றன. உமையம்மையுடன் இடபம் மீது ஏறிக்கொண்ட சிவபெருமான் கயிலையங்கிரியை விட்டுப் புறப்பட்டு இமயமலைச் சாரலில் உள்ள சரவணப் பொய்கையை அடைந்தார்.

அம்மையும் அப்பரும் ஆறுமுகம் கொண்ட முருகக் கடவுளுடைய ஆடலின் தன்மையைப் பார்த்துப் பார்த்துத் திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார்கள். பொய்கைக் கரையில் நின்றிருந்த அம்மையப்பரைக் கண்ட முருகக் கடவுளும் திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார். சிவபெருமான் உமாதேவியரை நோக்கி ''நீ உன் புதல்வனைக் கொண்டு வருவாய்'' என்று பணித்தருளினார். பிராட்டியார் இடபவாகனத்தினின்று இறங்கி, அகில சராசரங்களிடத்தும் தாய்மையன்பு பிரவகிக்கும் இனிய வுள்ளத்திலே பொங்கி எழும் பேரன்புடன் சரவணப் பொய்கையை அடைந்தார். ஒவ்வொரு குழந்தையாகத் தூக்கிக் கொஞ்சும் அளவுக்கு ஆசையைத் தேக்கி வைக்க முடியாத உமாதேவியார் அந்தக் குழந்தைகள் ஆறினையும் அப்படியே அள்ளியெடுத்துக் கொண்டார்.

அப்படி வாரி யெடுத்ததும் ஆறு குழந்தைகளின் உடல்களும் ஒருடலாக மாறியது. தலைகள் மட்டும் ஆறாகவே நின்றன. உலகையெல்லாம் பேதமுறச் செய்து காட்டும் தேவிதான் அவற்றை ஒன்றுபடுத்திச் சேர்த்தும் வைப்பாள் என்பதன் தத்துவ விளக்கமே இது.

''எந்தை சத்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்துபோல ஒன்றாகியே கூடிய முறைபோல்
அந்தமில்லதோர் மூவிரு வடிவும் ஒன்றாகி
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.''

உயிர்கள் எல்லாம் சர்வசங்கார காலத்தில் ஒடுங்கும்போது இறைவனுடைய சக்திகள் ஒன்றுபடுவது போல் அம்பிகை ஆறுகுழந்தைகளையும் அணைத்த போது ஆறு திருவுருவங்களும் ஒன்றுகூடின. அதனால் முருகவேள் கந்தன் என்ற பேரைப் பெற்றனன்.

தேவர்கள் பூமாரி பொழிந்து போற்றி வணங்கினர். ஆறுருவும் ஒன்றானமையால் ஸ்கந்தன் என்னும் திருநாமத்தை முருகன் பெற்றார். ஈசனின் கண்ணினின்று ஐயன் தோன்றினாலும் அம்பாளின் அணைப்பினால் அவன் பெற்ற பெயரையே அவனது தலைசிறந்த நாமமாகக் கொண்டு இந்நூலைக் கந்தபுராணம் என்று சொல்கிறோம். ஈசன் முருகனைத் தீப்பொறிகளாக வெளியே அனுப்பினார். தேவி தானே அவற்றை ஒன்று சேர்த்து அருகே கொணர்ந்தார்.

''ஆதி நாயகன் கருணையாய் அமலமாய்ப் பரம
போத நீரதாய் இருந்த தன்கொங்கையில் பொழிபால்
ஏதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதல் மாமகற் கன்பினால் அருத்தினாள் கவுரி.''

குழந்தையைக் கையில் எடுத்த பார்வதி தேவியார், குமரவேளுடைய முடிகள்தோறும் மோந்து, அழகிய முதுகினைத் தடவி, ஆதி முதல்வராகிய சிவபெருமானுடைய கருணையாகவும், நிர்மலமாகவும் சிவஞான போதமாகவும் விளங்குகின்ற தனது

திருமுலைகளில் பொழிகின்ற திருஞானப் பாலைக் குற்றமில்லாத நவமணிக் கிண்ணத்தில் ஏற்றுக் காதல் சிறந்த குமாரனிடம் உமாதேவியார் தந்து குடிக்குமாறு புரிந்தருளினார். அதனை உண்ட முருகவேள் ஞான பண்டித சுவாமியாகவும்|சிவபெருமானுக்கே குருவாகவும் விளங்கினார்.

குமரவேளுக்குப் பார்வதிதேவியார் பாலூட்டிப் பின் கந்தக் கடவுளை எம்பெருமான் திருமுன்னே கொண்டுபோய் வணக்கம் செலுத்துமாறு கூற முருகப்பெருமான் சிவபெருமானை வணங்கி நின்றார். இறைவன் தம் திருக்கரங்களினால் குமரக் கடவுளை எடுத்து மார்பில் அணைத்துப் பெருங் கருணையோடு தம் பக்கத்தில் இருத்தி அருளினார். பின்பு பிராட்டியாரையும் திருக்கரத்தால் எடுத்துத் தமது இடப்பக்கத்தில் இருத்தியருளினார். அம்மையாருக்கும் அப்பருக்கும் இடையே குமாரமூர்த்தி எழுந்தருள சிவபெருமான் சோமாஸ்கந்த மூர்த்தியாக (உமை, ஸ்கந்தர் இவர்களுடன் கூடிய ஈசனாக) இனிது வீற்றிருந்தார்.

''அருத்தி தந்திடு குமரவேள் ஒருபுடை அமரப்
பெருத்த மன்னுயிர் யாவையும் முன்னரே பெற்ற
ஒருத்தி தன்னையுங் கையினால் ஒய்யென வாங்கி
இருத்தி னான்தன திடந்தனில் எம்மையாள்
இறைவன்''

''ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவோடு பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன்று அழிவின்றி வைகுமா
றொக்கும்.''

ஏலவார் குழலியாகிய இறைவிக்கும் இறைவர்க்கும் இடையே குமாரக் கடவுள் வீற்றிருக்கின்ற காட்சி இரவுக்கும் பகலுக்கும் இடையே மாலைப்பொழுது நிலைபேறாக நிற்பதை நிகர்க்கும்.

சிவம்-சத்து, சக்தி-சித்து, முருகன்-ஆனந்தம். சச்சிதானந்தம். உண்மை என்பது சிவபெருமான். அறிவு என்பது சக்தி. இன்பம் என்பது முருகன். மூன்றும் சேர்ந்து மோட்சமாகிய சச்சிதானந்தம்.

முருகன் என்ற பெயரில் வல்லினம், இடையினம், மெல்லினம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அட்சரம் உண்டு என முன்பு கூறினோம். வல்லமை பொருந்திய ஈசன் வல்லினம், மென்மை மிகுந்த தேவி மெல்லினம்; இருவர்க்குமிடையே இரண்டு குணமும் கூடிப் பொலிந்தவன் முருகன். 'முருக' என்ற பெயரின் முதலெழுத்தான 'மு' இடையினத்தையே சேர்ந்ததல்லவா!

இடபத்தின் மீது அரனாருக்கும் அம்பிகைக்கும் இடையே ஆறுமுகப் பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டு திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் கடல்போல ஆரவாரித்து பக்கத்தும் முன்னும் பின்னுமாக நெருங்கி ''குமார சுவாமியே! அடியேங்கள் சூரபன்மனால் மிகவும் வருந்திக் கொண்டிருக்கிறோம். தாங்கள் ஆட்கொண்டருள வேண்டும்.'' என்று அவதார காரியத்தை நினைவூட்டுவதுபோல் விண்ணப்பம்செய்து பூமழை பொழிந்து வணங்கித் துதித்தார்கள்.

அப்பொழுது கார்த்திகைப் பெண்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி நின்றனர். இறைவன் அவர்கள் மீது திருவருள் நோக்கம் செய்து

''கந்தன்தனை நீர் போற்றிய கடனால் இவன்
உங்கள்
மைந்தன் எனும் பெயராகுக மகிழ்வால் எவரேனும்
நுந்தம்பக லிடை இன்னவன் நோன்றாள் வழி
படுவோர்
தந்தம்குறை முடித்தே பரந் தனை நல்குவம்
என்றான்'

''கார்த்திகை மாதர்களே! முருகனை நீங்கள் வளர்த்தபடியால் இவன் உங்கள் மகன் என்ற பொருளில் கார்த்திகேயன் எனப் பேர் பெறுவான். உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகன் திருவடிகளை வழிபடுவோர்க்கு நாம் இகபரநலன்களை அருள்வோம்'' என்று சிவபெருமான் அருள் புரிந்தார்.

உமாதேவியார் தம்முடைய திருக்குமாரனைச் சென்று தழுவிய பொழுது பேரன்போடு சுரந்த பால் சரவணப் பொய்கையில் சிந்திப் பெருகிப் புகுந்தது. அந்தப் பாலையுண்ட ஆறுமீன்கள் ஆறுமுனிவர்களாக வடிவம் கொண்டு சிவபெருமானைத் துதித்தனர். இதனைக் கண்ட உமையம்பிகை வியந்து நின்றார். மீன்கள் முனிவர்களான மாறியதன் காரணத்தைப் பரமேசுவரனிடம் கேட்டாள். இது தேவிக்குத் தெரியாத விசயமல்ல என்றாலும், சிவபெருமானின் அமுத வாக்கால் கேட்க வேண்டும் என்று விரும்பினார்.

''வசிஷ்டரின் குமாரர் சக்தி முனிவர்இளமையிலேயே இறந்துவிட்டார். அப்போது கருவுற்றிருந்த அவரது மனைவி பெற்றெடுத்த பிள்ளை பராசரர். இவருக்கு தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்கரபாணி, மாலி என்று புதல்வர்கள் அறுவர். இந்தக் குழந்தைகள் அறுவரும் தண்ணீரில் விளையாடியபொழுது மீன்கள் இறந்து போயின. இதனை அறிந்த பராசர முனிவர், ''மீனாகக் கடவது'' என்று தம் குழந்தைகளுக்கே சாபம் கொடுத்தார். சொந்த மக்கள் என்றும் ஏனையோர் என்றும் முனிவர்களுக்கு வித்தியாசம் கிடையாது. அதனால் சபித்தார். குழந்தைகள்செய்த பிழை சிறிதுதான். அதற்கு அவர்கள் அடைந்த தண்டனையோ பெரிது. தங்கமே யானாலும் அடித்து நீட்டினாலன்றி ஆபரணமாகச் செய்ய முடியாதல்லவா? தண்டனையாலேயே மக்கள் மேன்மை பெறுவர் என்று பராசரர் இப்படி அவர்களைத் தண்டித்தார்.

மீன்களாய் மாறிய பராசர குமாரர்கள் ''எத்தனை காலம் நாங்கள் மீனாக இருக்க வேண்டும்?'' என்று கேட்க ''சரவணப் பொய்கையிலே முருகன் அவதரித்ததும் அவனுக்கு ஊட்டப்படும் ஞானப் பால் சிந்தும், அதனை நீங்கள் சுவைத்தால் சாபம் நீங்கும்'' என்று பராசரர் கூறினார்.

ஈசன் இவ்வரலாற்றைப் பார்வதி தேவிக்கும் கூறினார். சிந்தை மகிழச் சிவபிரானை நோக்கிப் பராசர புதல்வர் அறுவரும் துதித்தனர். இறைவன் அவர்களை நோக்கி ''நீங்கள் திருப்பரங்குன்றம் என்னும் மலையிலே தவம் செய்துகொண்டிருங்கள். விரைவில் நம்முடைய குமாரனாகிய கந்தன் அங்கு வந்து உங்களுக்கு அருள்செய்வான்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். பராசர குமாரர்கள் அவ்வாறே அகன்றனர்.

கார்த்திகைப் பெண்களுக்கும் திருமால் பிரமன் முதலிய தேவர்களுக்கும் அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறு சிவபெருமான் விடை தந்து கயிலாயத்தை அடைந்து, முருகக் கடவுளோடும்



உமாதேவியாரோடும் இடபவாகனத்தினின்றும் இறங்கிச் செம்பொன் திருக்கோயிலினுட் சென்று சிங்காசனத்தின் மீது வீற்றிருந்தருளினார். நவ வீரர்களும், இலக்க வீரர்களும் தங்கள் தமைய னாராகிய கந்தப்பெருமானைப் பூசித்து வணங்கி அவர் தொண்டின் வழி நின்றனர்.

சிவபெருமானுக்கும் பார்வதி தேவியாருக்கு மிடையே எழுந்தருளியிருந்த முருகக் கடவள் தம் தம்பியரோடு பற்பல திருவிளையாடல்கள்செய்யத் திருவுளம் கொண்டருளினார்.

கந்தப் பெருமான் கழலிணைகளிலே தண்டை யும் கழலும் சதங்கையும் ஒலித்தன. திருவரை யிலே கிண்கிணி இசைத்தது. திருச்செவிகளிலே குண்டலமும் திருமார்பிலே மதாணியும் திரு நெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கின.

''பாடின்படு மணியார்த்திடும் பணைமென் குழல்
இசைக்கும்
கோடங்கொலி புரிவித்திடும் குரல்வீணைகள்
பயிலும்
ஈடொன்றிய இறுபல்லியம் எறியும் எவரெவரும்
நாடும்படி பாடுங்களி நடனம் செயும் முருகன்.''

முருகன் இனிய மணியை ஒலித்தும், புல்லாங் குழலை ஊதியும், கொம்பு வாத்தியத்தை வாசித் தும், வீணைகள் மீட்டியும், அதற்கு ஏற்ப சிறிய வாத்தியங்களை முழக்கியும், எல்லோரும் நாடிக் கேட்குமாறு இனிது பாடியும் ஆனந்த நடனம் புரிந்தார்.

இளம்பூரணனாம் எம்பெருமான் சிறிது அசைந்து ஆடல் புரிகின்றபோது அப்பெருமா னுடைய திருஅரையில் கட்டிய தங்கமணிகளாகிய கிண்கிணிகள் ''கல்கல்'' என்று அசைய அந்த இன்னோசை பதினாலு உலகங்களிலும் பரவியது.

உலகமுண்ட நாராயணரது நலம் புரியும் வலம் புரிச் சங்கத்தின் ஓசை, அருகில் இருந்த கற்பகச் சோலையும் தடாகமும் மட்டுமே கேட்டன. மலைகள் பிளக்குமாறு திருவிளையாடல் புரியும் இச்சிறிய பெருந்தகையின் கிண்கிணியின் இனிய நாதம் ஈரேழ பதினாலு லோகங்களிலும் கேட்டது என்று அருணகிரிப் பெருந்தகை அருளிச் செய்கின் றார்.

''மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது
வேலெடுத்துத்
திண்கிரி முந்த விளையாடும் பிள்ளைத்
திருவரையிற்
கிண்கிணி ஓசை பதினாலுலகமுங் கேட்டதுவே.''

கந்தக் கடவுள் மன்றங்களிலும் குன்றங்களிலும் உலவுவார். சோலைகள், ஆறுகள், கடல்கள், தடாகங்கள்தோறும் சென்று உலவுவார். சிவத் தலந்தோறும் உலவுவார். வடமொழி, தென் மொழி கற்கும் கழகந்தோறும் உலவுவார். மண்ணில் உலவுவார். திக்குகளில் உலவுவார்; சந்திர சூரியர் முதலிய கிரகங்களும் நட்சத்திரங்களும் உள்ள இடங்களில் உலவுவார், இந்திரலோகத்தில் உலவு வார். பிரம்மலோகத்தில் உலவுவார்; நாராயணரது

உலகத்தில் உலவுவார், சிவலோகத்தில் உலவுவார், பிருதிவி அண்டங்கள் எங்கும் உலவுவார். அப்பு அண்டங்களெங்கும் உலவுவார்; தேயு வாயு அண்டங்களிலும் மற்றைப் புவனங்களிலும் உலவுவார். ஆறுமுகங் கொண்டு பலராய்த் திரிவார்; ஒரு முகங் கொண்டு ஒருவராய்த் திரிவார்; வேதியராகத் திரிவார், வீரராயும் முனிவராயும் திரிவார். திருவடிகளால் நடந்துசெல்வார். குதிரை, யானை யாளி, தேர், விமானம் ஆகியவற்றின் மீதும்செல்லுவார். மேகத்தின் மீதும் செல்லுவார்; மணியசைப்பார்; வீணை வாசிப்பார்; குழல் ஊதுவார்; கல்லையும் கனிய வைக்கும் இசைபாடிக் கூத்தாடுவார்.

''மன்றுதொ றுலாவுமலர் வாவிதொ றுலாவுந்
துன்றுசிறு தென்றல்தவழ் சோலைதொ றுலாவும்
என்றுமுல வாதுலவும் யாறுதொ றுலாவும்
குன்றுதொ றுலாவும்முறையில் குமர வேளே''.

இவ்வாறாகக் கந்தக் கடவுளின் திருவிளையாடல்கள் நாள்தோறும் பெருகின. கந்தக் கடவுளின் திருவிளையாடல்களைக் கண்டுவியந்த உமாதேவியார், சிவபெருமானை வணங்கி ''எம் பெருமானே! நம் குமரன் இச்சிறு குழவிப் பருவத்தே செய்யும் திருவிளையாடல்கள் அதியற்புதமாக இருக்கின்றன. இதனை எண்ணிப் பார்க்கின்றபொழுது, மாயையில் அவன் தங்களுக்கு ஒப்பானவன் எனக் கருதுகிறேன். அவனுடைய பெருமையைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்' என்று ஒன்றும் அறியாதவர் போல் வேண்டிக் கொண்டார்.

''உமையே! எல்லா உயிர்களும் இவ்வுண்மையை அறிந்து உய்யும் பொருட்டு உன் குமரனது இயல்பை நீ வினவினாய். நாம் அதனை மகிழ்ச்சியுடன் கூறுவோம்.'' என்று சிவபெருமான் முருகன் பெருமையை மொழிகின்றார்.

''நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கு;
அவைதாமே கந்தன்
தண்முக மாகி உற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும்
ஒன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற
அன்றே.''


தேவி! நமக்கு ஆறு திருமுகங்கள் உண்டு. அவையே முருகனுடைய ஆறுமுகங்கள். ஓம் என்ற குடிலையுடன் நமது மந்திரம் ஆறெழுத்தும் உன் மகனுடைய சடக்கர மந்திரமாகியது.

சரவணபவ; ச-மங்கலம்; ர-ஒளி-கொடை; வ-சாத்துவிகம்; ந-போர்; பவ-இவைகளுடன் தோன்றியவர்.

கந்தக் கடவுள் நமது சத்தியே; அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப் போல் யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவன் பாலன் போலத் தோன்றினாலும் எல்லாவற்றையும் உணர்ந்த முற்றறிவினன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத்தையும், ஞானத்தையும் முத்தியையும் கொடுக்க வல்லவன்.

''ஆதலின் நமது சக்தி அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும்
நின்றான்
ஏதமில் குழவி போல்வான்; யாவையும்உணர்ந்தான்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள
வல்லான்.''

(தொடரும்)



## பழநி முருகன் தங்கத் தேரோட்டம்

பிரமன் சாரதி தங்கத்தேரிலே ஊர்கோலம்

பரமன் பார்வதி வந்து வாழ்த்தவே
வைபோகம்

காணச் செய்தன கண்கள் புண்ணியம்

வணங்கக் கொண்டன கைகள் பாக்கியம்

அரகர அரகர அரகர எனச் சொல்லாத
நாவில்லை

சரவணபவன்திருப் பாதமும் நெஞ்சினில்
எண்ணாத நாளில்லை.

# வல்லக்கோட்டையில் நான் கண்ட "முருகன்"!

எம். வி. அரங்கநாதன்

பூமியில் விழுந்த விதைகள் அத்தனையிலும் முளைத்தெழுந்து ஓங்கி வளர்ந்து, நின்று நெடு நாள் நிழல்தருபவை கொஞ்சம். நூறாண்டுகள் வாழ்கின்ற மாமனிதரது வாழ்வில்கூட வாழ்ந் தோம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் சொல்லும் நாட்களும் அப்படியே. நான் என்றுமே மறக்க முடியாத மகத்துவமிக்க நாட்களில் ஒன்று—

*1983 மார்ச்சு திங்கள் 20-ஆம் நாள் !*

அது முருகப்பெருமானுக்கு உகந்த ஒரு பங்குனி மாதம்.

ரத்தினகிரிசாமிகளைத் தரிசிப்பதற்காக நெடு நாள் என்னுள் கிடந்த தணியாத ஆசை நிறை வேறிய நாளும் அதுதான். சாமிகளை தரிசிக்க வேண்டும் என்ற என் முயற்சிகள் பலமுறை பல காரணங்களால் தடைபட்டு வந்ததை தாம்பரம் இறைபணி மன்றத் தலைவர் திரு த. ஏகாம்பரம் அவர்களிடம் தெரிவித்தபோது அவர் பேரன் போடு ரத்தினகிரிசாமிகளை தரிசிக்க ஏற்பாடு செய்தார்.

ரத்தினகிரி பாலமுருகன் அடிகளை சந்தித்து பாக்கியத்திற்குரிய அவரது ஆசிகள் பெற்ற மகிழ்ச்சியோடு அன்று இரவே வல்லக்கோட்டை செல்லும் வாய்ப்பும் கிட்டியது.

வாழும் மகான்களில் ஒருவராகத் திகழும் மதிப்பிற்குரிய மயிலை மாமுனி குருஜி சுந்தரராம் சுவாமிகள் குழுவில் வல்லக்கோட்டை வந்தபோது ஊர்மக்கள் வெகு ஆர்வத்தோடு எங்களை வர வேற்றார்கள்.

அருள்விளங்கு திருநாடாம் தமிழகத்தில் சென்னை மாநகருக்கு மேற்கில் சுமார் நாற்பது கிலோ மீட்டர் தூரத்தில் செங்கற்பட்டுக்கும் ஸ்ரீபெரும்புதூருக்கும் இடையில் உள்ள ஷேத்திரம் வல்லக்கோட்டை.

திருப்போரூரில் முருகனை வணங்கி வழிபட்ட பின் திருத்தணி செல்லும் எண்ணத்தோடு கண்ணு றங்கிய அருணகிரியாரை கனவில் தோன்றி, 'வல்ல கோட்டை வர மறந்தாயோ,' என்று முருகனே வலிந்து அழைத்து எட்டு பாமாலைகளைப் பெற்று மகிழ்ந்த பெருமையும் வல்லக்கோட்டை என வழங்கும் இந்தக் கோடை நகருக்கு உண்டு.

இத்தகைய பெருமைக்குரிய முருகப் பெரு மானை தரிசிக்க வந்த எங்களை வரவேற்று ஊர் மக்கள் அன்று கண்கலங்கச் சொன்னவை நெஞ்சில் நேற்று நிகழ்ந்தவை போல் மெய்சிலிக்கிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாக கருதப் படும் அருள்மிகுந்த வல்லக்கோட்டை முருகன் ஆலயத்திற்கு இன்று கோபுரமில்லை...முன்விதான மில்லை. சீரில்லை...சிறப்பில்லை. பார்ப்பாரற்று கொட்டடியாகத் தோற்றமளிக்கும் நிலை, ஊர் மக்களைப் போலவே எங்களையும் கண்கலங்க வைத்தது. ''வல்லக்கோட்டை முருகன் இனி சீரோடும் சிறப்போடும் உங்களுக்கு காட்சி தரு வான்,'' என்று மயிலை மாமுனி அவர்கள் ஊர் மக்களுக்கு உத்திரவாதமான ஆசியை வழங்கி னார்கள்.

அன்றைய தினத்திற்கு முன்னிரு நாட்களில் கொச்சி, திருவனந்தபுரம், தஞ்சை ஆகிய வற்றா வளமுடைய நகரங்களுக்கு மேல் விமானத்தில் பயணம் செய்தபோது கண்ணுக்குத் தென்பட்ட

***

**வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர் ஆலயம் அண்மைக் காலத்தில் மிகப் பிரபலம் அடைந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் தேடிவந்து வணங்கும் பிரார்த்தனைத் தலமாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வாலயம் சிறப்படைய அருந்தொண்டாற்றிவரும் அன்பர்களில் குறிப்பிடத்தக்க முதல்வர் இலங்கைத் தூதுவரகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றிவரும் திரு எம். வி. அரங்கநாதன் அவர்கள் ஆவார். ''வல்லக் கோட்டை முருகன்'' உடன் தமக்கு ஏற்பட்ட தெய்வீக அனுபவங்களை அவர் தொடர்ந்து விவரிக்க உள்ளார். அவற்றை நாம் படித்துப் பயன் பெறுவோமாக!**

இடமெல்லாம் வறண்டு வெடிப்புற்றுப்போன நிலங்களையே நான் பார்க்க நேர்ந்தது. கோடையின் உக்கிரம்; வறட்சியின் கோரப் பிடியில் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று பெருமை பேசப்படும் தஞ்சையே தகித்துக் கொண்டிருந்தபோது, வல்லக்கோட்டை திருக்குளம் அன்று கரைததும்ப அலைவீசிக்கொண்டிருந்தது.

ஒரு சமயம் தேவேந்திரன் முருகனை வழிபட வல்லக்கோட்டை வந்து, இறைவனைப் பூஜிப்பதற்கு கோயிலைச் சுற்றி புஷ்பவனங்களையும் கோயிலுக்கு முன் தாமரைத் தடாகம் ஒன்றையும் தனது வஜ்ஜிராயுதத்தால் உண்டாக்கியதாக சொல்லப்பட்ட திருக்குளம் அது.

எக்காலத்தும் வற்றாத ஜீவ ஊற்றுக்களைக் கொண்ட அந்த தேவ குளத்தின் துறைகள்கூட படிக்கட்டுகள் இல்லாமல் கற்களால் கரையமைந்து காணப்படுகின்றன.

இந்தியாவில் வடமேற்கு கணவாய்களின் வழியாக நிகழ்ந்த அன்னியப் படையெடுப்புகள் காரணமாக தேச முழுதும், சேதமடைந்தும் சுவடு தெரியாமல் அழிந்தும்போன நமது புராதனக்கோயில்கள் கோட்டைகள் ஏராளம், வல்லக்கோட்டை எனும் பெயரும், ஊரைச்சுற்றிலும் தொடர்ந்து அகழிகள் போல் தென்படும் குளங்களும், ஊர்புறத்தே காணப்படும் வளமான மருதநிலங்களையும் பார்க்கிறபோது, ஏதோ ஒரு யுத்தத்தால் சிதறுண்டு தனது சரித்திரத்தையும் இடிபாடுகளில் இடிந்துவிட்ட தலைநகரைப்போல இந்த கோடை நகர் நம்மை யூகிக்க வைக்கிறது.

ஆனாலும் காலகாலமாய் கற்றோரது வாக்கிலும் எழுத்திலும் வல்லக்கோட்டைக்கென ஒரு புராதன-புராண வரலாறு திகழ்கிறது.

முன்பொரு காலத்தில் இலஞ்சி எனும் தேசத்தில் சலங்கொண்டபுரத்தை ஆண்டு, நிகரற்று விளங்கிய பகீரத மன்னனை, மகரிஷி நாரதர் காண வந்தபோது அவரை கவுரவிக்காமல் பாராமுகமாக இருந்தான் மன்னன். உள்ளுக்குள் கோபமடைந்த நாரதர் பகீரதனுக்குப் பாடம் புகட்ட விரும்பினார். அப்போது கோரன் எனும் அசுரன் திக் விஜயம் செய்து கொண்டிருந்தான். தம் பலத்தை திக்கெங்கும் போர் செய்து நிரூபித்து வருவது அக்கால மன்னர்களுக்கும் மாவீரர்களுக்கும் பெருமைக்குரிய வழக்கம். அவ்வாறு திக்விஜயம் மேற்கொண்டிருந்த கோரனை நாரதர் சந்தித்து தனக்கே உரிய தந்திரவார்த்தைகளில், ''எல்லாவகையிலும் தன்னிகரற்று சிறந்து விளங்கும் பகீரத மாமன்னனை வெல்வதில்தான் உன் திக்விஜயத்தின் வெற்றியே அமைந்திருக்கிறது,'' என்று கூறினார்.

அதைச் சவாலாக ஏற்றுக்கொண்ட கோரன் பகீரதனோடுபோர்தொடுத்தான். நாரதர் எண்ணம் நிறைவேறியது. தன் ஆட்சிக்குட்பட்ட அத்தனையையும் கோரனிடம இழந்து காட்டுக்கு ஓடினான் பகீரதன்.

பின் தன் தவறை உணர்ந்து பகீரதன் நாரதரை வணங்கி அவர் சொற்படி காட்டில் துருவாச முனிவரைச் சந்தித்தான். துருவாசரின் உபதேசப்படி வெள்ளிக்கிழமை விரதங்களோடு பாதிரி மரத்தின்கீழ் முருகனைக் குறித்துக் காட்டில் கடுந்தவம் புரிந்தான். அதில் சித்திகள் பெற்றான். அருளும் சித்தியும பெற்று நாடு திரும்பும் பகீரதனை அசுரன் கோரன் எதிர்கொண்டு வரவேற்று நாட்டையும் செல்வத்தையும் அவனுக்கே ஒப்படைத்தான். மீண்டும் அரச பொறுப்பேற்ற பகீரதன் வல்லக்கோட்டை எனும் ஊரில் முருகனுக்குத் திருக்கோயில் அமைத்தான்; வழிபாடுகள் செய்து புகழ்பெற்றான்; தனக்கென அங்கு ஒரு கோட்டையையும் அமைத்துக் கொண்டான் என்பது தல வரலாறு.

இத்தனை பெருமைக் குரியவரா வல்லக்கோட்டை முருகன்?

''கோலச்சாலிச் சோலைச் சீலக்கோடை தேவப் பெருமானே'' என்று அருணகிரியார் அழைத்த கோடை நகர்ப் பதியா இது?

மெய்யெலாம் சிலிர்ப்பாய் உணர்வெல்லாம் உந்துதலாய் வல்லக்கோட்டை முருகனைத் தரிசிக்க நாங்கள் கர்ப்பகிருகத்தின் முன்மண்டபத்தில் அடியெடுத்து வைத்தபோது கண்ட திருக்காட்சி-ஆகா!

''ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி—'' காண்போருக்குப் பரவசமாய் கரம்குவிப்போருக்குக் கற்பக விருட்சமாய் வள்ளி, தேவசேனா ஆகிய தம் இருதேவியர்களுடன் ஏழு அடி உயரத்தில் முருகன் தரும் கண்கொள்ளாக் காட்சியில் உலகையே மறந்து... குவிந்த கரங்கள் உயர்ந்தன!

அந்த சில நிமிடங்கள் இறைவன் என்கிற எண்ண ஒளியில் மனம் கடந்த தியான வெளியில் நின்றது போன்ற அனுபவம் !

மீண்டும் என் நிலைக்கு நான் வந்தபோது ஊர்மக்கள் தெரிவித்த இரண்டு விஷயங்கள் என்னைப் பாதித்தன.

ஒன்று எண்ணெய் இல்லாததால் கோயிலுக்கு சரியாக விளக்கேற்ற முடிவதில்லை; மற்றொன்று ஆறுமாத காலமாய் சம்பளம் கொடுக்கப்படாததால் அர்ச்சகர் கோயிலைவிட்டுப் போகும் நிலையிலிருக்கிறார்.

அவரும் போய்விட்டால்?
அர்ச்சிக்க ஆளில்லாமல் ஆலயமா?
வெளிச்சமில்லாத ஞானவெளி?


அட! என்னக் கொடுமை இது! இந்துமதப் பெருமைகளையும். இந்துக் கடவுளர்களின் பெருமைகளையும் வானளாவப் பேசி விரதம் மாறாத ஒழுக்கமுடைய நமது பெரியோர்கள் நினைவில் இருந்து இந்தச் ஷேத்திரம் எப்படி தப்பியது?

அடுத்தவாரத்தில் இருந்து கோயிலில் என்றென்றும் அணையாமல் விளக்கெரியும் என்று நான் அவர்களுக்கு உறுதியளித்தேன். பின் அன்று பார்வையாளர்கள் புத்தகத்தில் என்ன எழுதினேனோ அதைத்தான் முன்னதாக நான் முருகனிடமும் கேட்டுக் கொண்டேன் - வல்லக்கோட்டை ஆண்டவருக்கு முன் இப்படித்தான் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டேன்.

''என்னிடம் செல்வம் இல்லை; நீ கொடுத்த செல்வாக்கு இருக்கிறது. எனக்காக அதை நான் இன்றுவரைப் பயன்படுத்தவில்லை; உனக்கே அர்ப்பணிக்கிறேன். பெரிய கோயிலாக இதைப் புனரமைக்க, குறிப்பாக உன் ஆலயத்தில் அணையாமல் விளக்கெரிய என் முயற்சிகளுக்குப் பலம் கொடு!''

(தொடரும்)

# முழுமுதற் கடவுள் பிள்ளையார்



பேராசிரியர்
த. அகரமுதல்வன்

ஒரு வீட்டின் வரவேற்பறையில் அமர்ந்திருக்கிறோம். சுவரில் பல படங்கள் மாட்டப் பெற்றிருக்கின்றன. அனைத்தும் அவ்வீட்டுத் தலைவரின் படங்களே. ஒரு படம் அவர் குழந்தையாக இருந்தபோது எடுத்தது. அடுத்த படம் அவர் மாணவராகப் பள்ளிக்குச் செல்கையில் எடுத்தது. மற்றொரு படத்தில் அவர் மணமகனாகத் தோற்றமளிக்கிறார். அது அவர் திருமணத்தின்போது எடுத்தது. நான்காவது படத்தில் அவர் தந்தையாக; அவருடைய மனைவியும் பிள்ளைகளும் உடனிருக்கின்றனர். ஐந்தாவது படத்தில் அவர் தாத்தாவாகிவிட்டார். அவருடைய மனைவி, மக்கள், மருமகப் பெண்கள், பேரக்குழந்தைகள் ஆகிய அனைவரும் அவரைச் சூழ்ந்திருக்கின்றனர். நாம் பார்த்த ஐந்து படங்களிலும் வீட்டுத் தலைவர் வெவ்வேறு கோலத்தில் இருக்கிறார். கோலத்திற்கேற்பப் பெயரில் மாற்றம். மற்றபடி ஆள் ஒருவரே. இப்படித்தான் நம்முடைய தெய்வங்கள் பலவாக இருப்பினும் பரம்பொருள் ஒன்றே. ஒரே பரம்பொருள்வேண்டுவோர் வேண்டும வடிவிலும் பெயரிலும் வெவ்வேறு தெய்வமாகக் காட்சியளிக்கிறது.

இதனை 'ஒன்றே குலம்! ஒருவனே தேவன்' எனும் திருமூலர் வாக்காலும், 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்னும் பட்டினத்தார் பாட்டாலும், 'உய்வதனைத்திலும் ஒன்றாய்எங்கும் ஓர் பொருளாவது தெய்வம்' என்னும் பாரதியின் கவிதையாலும் உணருகிறோம்.

அப்பரம்பொருளைச் சைவர் சிவபெருமான் என்றும், வைணவர் திருமால் என்றும் வழங்குவர். உருவும் பெயரும் மாறுபடினும் உள்ளிருக்கும் பொருள் ஒன்றே என்பதையும், அப்பரம்பொருள், யார் எவ்வடிவில், எப்பெயரில் தம்மை வழிபடினும் அவ்வடிவில், அப்பெயரில் தோன்றியருளும் என்பதையும் யாவரும் ஏற்பர்.

''யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்.''

என்று அருணந்தி சிவாசாரியார் பாடியிருக்கிறார்.

உருவ வழிபாட்டினாலேயே பல தெய்வ வழிபாடு வந்தது. சில சமயத்தினர் உருவ வழிபாடு செய்வதில்லை. இந்து சமயமும் அருவ வழிபாட்டினை மேலானதாகவே போற்றுகிறது. என்னும் உருவ வழிபாட்டினையும், அருவுருவ வழிபாட்டினையும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஏன்? இறைவன் ஓர் உருவம் ஒருநாமம் அற்றவன்தான். ஆனால் உருவமற்றவனாக அவனை வழிபடுவது அரிது. மனம் உருவத்திலேயே பதியும்: உருவத்தையே எண்ணும். ஆதலின் வழிபாட்டின் தொடக்க நிலையில் உருவ வழிபாடே இயலும்.

ஒருவன் பிறந்தவன்றே அவன் தாய் இறந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். அப்பிள்ளை வளர்ந்த பின்னர் தன் தாயை வழிபட எண்ணுகிறது. அத்தாயின் ஓவியமோ, நிழற்படமோ இருப்பின் மகனின் மனம் அதில் ஒன்றும். ஒன்றுமே இல்லாதபோது ஒன்றுவது எப்படி? ஆதலின் 'ஒன்றி இருந்து நினைப்பதற்கே' உருவங்கள். உறுப்புகளுடன் உள்ள உருவங்களை வழிபட்டு வழிபட்டு, உள்ளக் கிழியில் உருவெழுதிக் கொண்டவர்கள் சிவலிங்கம் ஒளிச்சுடர் போன்ற உருவ அருவங்களைத் தியானிப்பது எளிது. சிவலிங்கமும், செஞ்சுடரும் ஒரு நிலையில் உருவமாய், ஒரு நிலையில் உறுப்புகளற்ற அருவமாய் நெஞ்சில் நிலைக்கின்றன. இவ்வாறு ரூபம், ரூபாரூபம் ஆகியவைகளை வழிபட்ட பின்னர் நிறைஞானம் பெற்றவர்க்கு இறைவனை அருவமாக வழிபட இயலும். ஆதலின் இந்து சமயம் மூவகை வழிபாட்டினையும் ஏற்றுக்கொள்ளுகிறது.

எங்கும் நிறைந்து, எக்காலத்தும் உறையும் கருணையுள்ள இறைவன், மனிதன் எடுத்துவைத்த கல்லிலும், செதுக்கி வைத்த சிலையிலும், ஏற்றி வைத்த ஒளியிலும் ஏறி நின்று அருள் பாலிக்கின்றான். ஆனால், மனிதர் தம் கற்பனைக்கேற்றவாறு தெய்வத் திருமேனிகளைப் படைத்துவிடவில்லை. அவனுருவை உணர ஆன்றோர் வெகுகாலம் தவமிருந்தனர். அவர்களின் அன்பிற்கிரங்கிய இறைவன் அவர்களுக்குத் தோற்றம் தந்தான். தாம் கண்ட அத்தெய்வ வடிவினைத் தியான சுலோகங்களாக அவர்கள் ஆக்கி வைத்தனர், அத்தியான சுலோகங்களின்படியே சிற்பிகள் சிலை வடித்தனர்; ஓவியர் சித்திரம் எழுதினர்.

கற்பனை கடந்த சோதியாக உள்ள பரம்பொருள் இவ்வாறு கருணையால் தாங்கிய உருவங்களுள் ஒன்றே ஸ்ரீகணேச வடிவமும். பரம்பொருளே விநாயகன் என்றும் பெயரேற்று ஆனைமுகத்தவனாய் அருள்பாலிக்கிறது. பிள்ளையார் என்று செல்லமாக நாம் அழைக்கும் அப்பெருமானின் பெருமைகளை இந்நாம் காண்போம்.

இந்து சமயத் தெய்வங்களுள் முதலிடம் பெற்றுத் திகழுபவர் பிள்ளையார். இந்துக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் முதலில் வழிபடுவது விநாயகரைத்தான். எழுதத்தொடங்கு முன் பிள்ளையார் சுழி போடுவதும், நூலைத் தொடங்கு முன் பிள்ளையார் காப்புப் பாடுவதும் சுப காரியமாயினும், அசுப காரியமாயினும்முதலில் கணபதி பூசை செய்வதும், திருக்கோயிலுக்குச் சென்றால் முதலில் கணேசரை வழிபடுவதும், பிற தெய்வங்களுக்குப் பூசை செய்யப் புகுமுன்முதலில் கணேசரை வழிபடுவதும் அவருடைய முதன்மையைக் காட்டுகின்றன.

''சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸந்ந வதனம் த்யாயேத் ஸர்வ
விக்நோபசாந்தயே!!''

என்று விநாயக மந்திரம் சொல்லி, குட்டிக் கொண்ட பின்னரே நம்முடைய வழிபாடுகள் அனைத்தும் தொடங்குகின்றன. 'பிள்ளையார் குட்டு குட்டிக்கொண்டாயிற்றா?'' 'பிள்ளையார் சுழி போட்டாயிற்றா?' என்றால் 'காரியம் தொடங்கியாயிற்றா?' என்றுதானே பொருள்!

இந்து சமயம் அநாதியானது - அதனையாரும் தோற்றுவிக்கவில்லை. எனினும், காலப்போக்கில் அவரவர் வழிபடும் தெய்வத்தின் பெயரால்சைவம் என்றும், வைணவம் என்றும் பல பிரிவுகள் ஏற்பட்டன. ஸ்ரீ-ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் இந்து சமயத்தை ஆறு பிரிவுகளாக வகுத்து வைத்தார்கள். இந்த அறுவகைப் பிரிவினுள் கணபதியையே பரம்பொருளாக் கொ்ண்டது காணாபத்யம். ஏனைய் கௌமாரம், சைவம், சாக்தம், வைணவம் சௌரம் எனும் ஐந்தும் முறையே குமரன், சிவபெருமான், சக்தி, விஷ்ணு, சூரியன் ஆகிய தெய்வங்களைத் தத்தம் பரம்பொருளாகக் கொண்டவை. ஆயினும் இந்த ஐவகைச் சமயத்தினரும் பிள்ளையாரை முதலில் வழிபட்ட பின்னரே தத்தம் பரம்பொருளை வழிபடுகின்றனர்.

மறந்தும் புறந்தொழா வைணவரும் விநாயகரை விஷ்வக்சேனர் என்றும், தும்பிகை ஆழ்வார் என்றும் வழிபடுகின்றனர். பல வைணவத் திருக்கோயில்களில் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார்.

'பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே' என்று அன்னையைப் பாடும் அதிதீவிர சாக்தரான அபிராமிப்பட்டரும்,

''தாரமர் கொன்றையும் சண்பக மாலையும்
சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்த னேஉலகு ஏழும்
பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும்என்
சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.''

எனக் கள்ளவாரணப் பிள்ளையாருக்குக் காப்புப் பாடிய பின்னரே அந்தாதியைத் தொடங்குகிறார். ஸ்ரீவித்தையை உபாசிக்கப் புகுமுன் கணபதி மந்திர உபதேசம் பெறவேண்டுமென்பது விதி.

''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என முருகனின் பரத்துவம் பேசும் தீவிர கௌமாரரான அருணகிரி நாதரும்,

''கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா



அத்துய ரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே''

என்று தமக்கேயுரிய சந்தக் கவியால் துதிக்கிறார்; 'முதல்வோனே' என முத்திரை பதிக்கிறார். குமரன் தன் அண்ணனாகிய ஆனைமுகத்தவன் துணையைக் கொண்டே வள்ளியை மணங்கொண்டான்.

சிவபெருமான் விநாயகரை நினையாமற் சென்றதனால் முப்புரம் எரிக்க அவர் ஏறிச் சென்ற தேரின் அச்சு முறிந்தது என்னும் பழங்கதை சைவரும் விக்கினேசனை முதலில் வழிபட வேண்டும் என்னும் முறைமையை வலியுறுத்தவன்றோ! ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிச் செய்த சுப்பிரமணிய புஜங்கத்தில், 'பரமேசுவரனாலேயே பசுமாணிக்கத்தக்கவர் என்றும், இந்திரன் பிரமன் முதலிய தேவரும் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தேடத் தகுந்தவர் என்றும் கணேசரைப் பாராட்டுவது அவருடைய முதன்மையைக் காட்டவன்றோ? ஆதலின் அறுவகைச் சமயத்தினரும் முதலில் வைத்து வழிபடும் முதன்மைச் சிறப்புக் குரியவர் பிள்ளையார்.

இந்து சமயத்தினர் மட்டுமன்று பௌத்தரும் சமணரும் வழிபடும் பெருமை பிள்ளையாருக்கே உண்டு. புத்தரைப் பல வடிவங்களில் வழிபடும் பௌத்தர் ஆனை முகத்தவனாகவும் வழிபடுகின்றனர். கணபதி இருதயம் என்ற மந்திரத்தை பௌத்தர்களும் ஜெபிக்கிறார்கள்! இலேசாந்திர சாதகத்தில் புத்தர் யானையாகப் பிறவி எடுத்தார் என்று கூறப்படுகிறது! புத்தருக்கு விநாயகன் என்றும் ஒரு பெயர் உள்ளதாகச் சூடாமணி நிகண்டு கூறுகிறது. ஆதலின் புறமதத்தவரும் போற்றும் பெருமை விநாயகருக்கு உண்டு.

மேலும், கணபதியையே பரம்பொருளாகக் கொண்டோர் பிற தெய்வங்களையும் கணபதிக்

குள் அடக்கிக் காண்பர். கணேசரின் நாபி பிரும்ம சொரூபம், முகம் விஷ்ணுபாகம், முக்கண்கள் சிவாம்சம், இடதுபாகம் சக்தி அம்சம், வலது பாகம் சூரியாம்சம் என்பர்.!

மனித உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆக்ஞை என ஆறு ஆதாரங்கள் உள்ளன. அவைகளுள் முதல் ஆதாரமாகிய மூலாதாரத்தில் உறைபவர் முதல்வரான பிள்ளையார். மூலமும் முதலுமாகிய விநாயகரைக் கச்சியப்ப முனிவர்

''அகரமென அறிவாகி உலக மெங்கும்
அமர்ந்து அகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்து அல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந்து ஆண்டுகொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்''

என்று பாடுவது எத்துணைப் பொருத்தமும் பொருட் சிறப்பும் உடையது என்பதை அறியலாம். இப்பாடலில் கச்சியப்பர், விநாயகரின் முதன்மை, எங்கும் வியாபித்திருக்கும் தன்மை, பிரணவப் பொருளாய பெருமை, அவரின் பல்வகை மூர்த்தி பேதங்கள், அவர் புரியும் அறக் கருணை, மறக் கருணை ஆகியவைகளை அடக்கிக் கூறுகிறார்.

'அகரமென அறிவாகி...' என்றதனால் பிள்ளையாரை ஞானமுதல்வன் என்கிறார். எழுத்துக்களுக் கெல்லாம் மூலமும் முதலும்அகரம் ஆவதுபோல் உலகுக்குக்கெல்லாம் மூலமும்முதலும் இறைவன் என்றார் திருவள்ளுவர்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

உலகுக்கு முதல் ஓங்கார நாதமே. அந்த நாதத்தின் திருவுருவே ஞானநாயகனாகிய விநாயகன். 'ஓம்' என்ற ஒலியுலக வித்தே கணபதி யாவார்' என்பது பதஞ்சலி சூத்திரம்.

'உலகமெங்கும் அமர்ந்து' — என்றதனால் கணபதி உலகமெங்கும் பரந்திருக்கும் வியாபகத் தன்மையைக் கூறினார். இது எல்லாத் தெய்வங்கட்கும் ஒக்கும் எனினும் பிள்ளையாருக்குச் சிறப்பாகப் பொருந்தும். பிள்ளையார் அருவநிலையில் மட்டுமன்று, உருவ நிலையிலும் உலகெங்கும் பரந்துள்ளார். ஆம். பிள்ளையார் சிலைகள் இந்தியாவில் மட்டுமன்று. இலங்கை, பர்மா, நேபாளம், திபேத், சயாம், கம்போடியா, ஜாவா, பாலித் தீவு, போர்னியோ, துருக்கிஸ்தான் இந்தோசீனா, கோதான், மங்கோலியா, ஜப்பான், சீனா, கிரேக்கம், உரோம், எகிப்து, அமெரிக்கா ஆகியநாடுகளிலும் உள்ளன. வேறெந்த இந்தியத் தெய்வத்திற்கும் விநாயகர் அளவிற்கு உலகெங்கும் வியாபித்திருக்கும் பெருமை இல்லை எனலாம்.

''அகர உகர மகரங்கள் நம்மால் பகருமொரு முதலாகி'' என்றது அவர் பிரணவத்தின் திருவுருவம் என்பதைக் குறிக்கிறது. அவருடைய யானைத் தலை ஓங்காரத்தின் சித்திர வடிவே. சிவமும் சக்தியும் களிறாகவும், பிடியாகவும் மாறி ஆனைமுகத்தவனைத் தோற்றுவித்ததெனும் புராணமும் அவர் ஓங்கார நாயகர் என்பதைக் குறிப்பதுவே.

''பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு......'' என்றதனால் பிள்ளையார் பல்வேறு மூர்த்தி பேதங்களாக வழிபடப்படுகிறார் என்பதைத் தெரிவிக்கிறார். விநாயகரின் பல்வேறு திருமேனிகளில் முப்பத்து இரண்டினை முக்கியமானதாகச் சொல்வர். அவைகளாவன: 1. பாலகணபதி, 2. தருண கணபதி, 3. பக்தி கணபதி, 4. வீரகணபதி, 5.சக்தி கணபதி, 6. துவிஜ கணபதி, 7. சித்தி கணபதி, 8. உச்சிஷ்ட கணபதி, 9. விக்கின கணபதி, 10. ஷிப்ர கணபதி, 11. ஹேரம்ப கணபதி, 12. லட்சுமி கணபதி, 13. மஹா கணபதி, 14. விஜய கணபதி, 15. நிருத்த கணபதி, 16. ஊர்த்துவ கணபதி, 17. ஏகாட்சர கணபதி, 18. வர கணபதி, 19. திரயட்சர கணபதி, 20. ப்ரப் பிரஸாத கணபதி, 21. ஹரித்ரா கணபதி, 22. ஏகதந்த கணபதி, 23. சிருஷ்டி கணபதி, 24. உத்தண்ட கணபதி, 25. ரணமோசன கணபதி, 26. துண்டி கணபதி, 27. துவிமுக கணபதி, 28. திரிமுக கணபதி, 29. சிங்கமுக கணபதி, 30. யோக கணபதி, 31. துர்க்கா கணபதி 32. சங்கடஹர கணபதி ஆகியனவாகும்.

பிள்ளையார், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் தரக்கூடியவர் என்பதையும், அன்பர்கட்கு அறக்கருணையும், அல்லார்க்கு மறக் கருணையும் புரிந்து ஆட்கொள்ளக் கூடியவர் என்பதையும் கச்சியப்பர் இப்பாடலின் இறுதியில் கூறுகிறார்.

பிள்ளையாரின் முதன்மைச் சிறப்பினை இதுவரை, கண்டோம். விநாயகர் எனறாலே தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாத தனிமுதல் என்று தானே பொருள்.

---

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து.*

**—கபிலதேவ நாயனார்.**

---


பூம்பாவை
யான் பெற்ற
திருப்பாவை
கதை வடிவம்: நிறைமதி
படம்: M.N. ராஜா
தங்கள் சித்தம் என் பாக்கியம். நான் பெற்றெடுத்த பூம்பாவையும், என் செல்வங்களும் அவருக்கே நான் காணிக்கையாக்கி, என்னையும் நான் அவருக்கு அர்ப்பணிப்பேன்.
சிவநேசரே! மூன்று வயதிலேயே பார்வதிதேவியாரிடம் பாலமுதம் உண்டு, சிவஞானம் பெற்று, செல்லுமிடங்கள்தோறும் சமணரை வென்று, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அருந்தொண்டாற்றி வரும் பாலறாவாயரே உம்மகள் பூம்பாவையை மணப்பதற்குத் தகுதியானவர்
ஆ! பாம்பு!
ஐயா! ஐயா! பூம்பாவையைப் பாம்பு தீண்டிவிட்டது!
ஐயோ,! என் மகளே!
பயனில்லை. பூம்பாவை சிவனடி சேர்ந்துவிட்டாள்.
ஆளுடைய பிள்ளையாருக்கு என் மகளை அர்ப்பணித்திருந்தேன், ஆனால் விதி இப்படி ஆயிற்றே!
பூம்பாவையைத் தகனம் செய்து, எலும்பையும், சாம்பலையும் ஒரு குடத்தில் சேகரித்து வைத்தார் சிவநேசர்.
அஸ்தியைப் பத்திரப்படுத்தி வைப்பேன். ஆளுடைய பிள்ளையார் திருமயிலைக்கு எழுந்தருளும் போது என் திருமகளுக்கு நேர்ந்ததை எடுத்துரைப்பேன்
சிவநேசரே! திருஞானசம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்துள்ளார். படம்பக்க நாதரைத் தரிசித்தபின் நம் திருமயிலைக்கும் எழுந்தருளுவார்.
ஆஹா!.. நாம் பெற்ற பேறே பேறு. மயிலையிலிருந்து திருவொற்றியூர் வரை அலங்காரப் பந்தலிட்டு ஆங்காங்கே தோரணங்களும் கட்டிவைத்து, ஆளுடைய பிள்ளையாரை மிகச் சிறப்பாக வரவேற்போம், வாருங்கள்!


"தென்னாடுடைய சிவனே போற்றி"
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"
புகலி வேந்தரே! உமக்கு யான் அர்ப்பணித்திருந்த என் மகள் பூம்பாவையை அரவு தீண்டியது நியாயமோ?
பூம்பாவையின் அஸ்திக்குடத்தை திருமதில் புறவாயிலிற்குக் கொண்டு வாருங்கள்
மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல் கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்!
அருமையால் அடியேன் பெற்ற பாவையை நீரே திருமணம் செய்தருள வேண்டும்!
சிவநேசரே! உம் மகள் அரவம் தீண்டி மாண்டு விட்டனள். இப்பூம்பாவை யான் பெற்ற திருப்பாவை இவள் என்றும் கன்னியாய் இருந்து கபாலீசுவரர் கற்பகவல்லிக்குத் தொண்டு புரியட்டும்.
அப்படியே செய்கிறேன் சுவாமி!

# பிறன் மனை விழையாமை பற்றித் திருவள்ளுவரும் மகான் பசவரும்

— அருட்செல்வி

கி.பி.முதல் இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராக அறிஞர்களால் பெரிதும் நம்பப்படுபவர் தமிழகத்துள் தோன்றி வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை. கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என வரலாறு தெளிவாகக் காட்டும் வள்ளுவரை ஒத்த பெரியார் கன்னட நாட்டு மகான் பசவர்.

ஒன்றே சமயமாகத் தம் கருத்துகளைக் கொடுத்துஅச்சமயத்தினுக்குத்தனிப்பெயர் இடாதவர் வள்ளுவப்பெருந்தகை. வீரசைவமெனத் தாம் வலியுறுத்திய சமயத்தைக் கூறியபோதும் ஒருவனே இறைவன், ஒன்று சமயம் என்று தெளிவுறுத்தியவர் மகான் பசவர்.

உலகப் புகழுக்குரிய இவ்விரு பெரியார்களும் பெரிதும் ஒன்றுபட்டு வலியுறுத்திக் கூறியுள்ள கருத்துகள் மிகப்பல. பிறனில் விழையாமையையும் மிக உயர்ந்த அறமாக வலியுறுத்தியுள்ளார்கள் இச்சான்றோர் பெருமக்கள்.

பாவங்களில் பெரிய பாவம் பிறன்மனை விழைதல் என்பர் வள்ளுவர்.

''அறன்கடை நின் றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்'' (குறள் 142)

''அறன்வரையான் அல்ல செயினும் பிறன்
வரையான்
பெண்மை நயவாமை நன்று'' (குறள் 150)

எனவரும் குறள்களைக் காண்க.

குருவிக் கூட்டை கலைப்பதும் பாவமாகக் கருதுவர் பண்புடையர். பிறன்மனை விரும்புதலால் விளையும் தீமை பிறர் குடும்பக்கூட்டையே கலைப்பதாகும். அறிவுநிறைந்த மாந்தர் இவ்வறமற்ற செயலைச் செய்ய மாட்டார்கள். இவ்வாறு செய்தால், செய்தவர் வாழ்வுமே கூட சீரழிந்துபோதல் உறுதி. அவர்கள் வாழ்வும் நலம் பெறாது என்பதையே வள்ளுவர்

''நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்'' (குறள் 149)

எனக்கூறி, அத்தகைய இழிபண்பினார்க்கு ''பகை பாவம் அச்சம் பழி'' நான்கும் நீங்காது எனவும் கூறி (146) வள்ளுவர் அவர்களைச் செத்தவர்- ''விளிந்தாரின் வேறல்லர்''(143) என்று பழிக்கக் காண்கிறோம்.

வீரசைவ அடியார்கள் ''சரணர்'' எனப்படுவர். அச்சரணர்க்கு இன்றியமையாத பண்புகளைப் பகரும் மகான் பசவர்

''வேண்டும் சரணனுக்குப் ''பிறன்மனை
வேண்டேன்''
என்றபேராண்மை'' (வசவண்ணர்வாக்கமுது 142) என்று கூறியுள்ளார்.

பிறன்மனை விழையும் தகாத விருப்பினோடு நீர்த்துறையில் நீராடினால் நீர்த்துறையும் அப்பாவ எண்ணத்தால் வற்றிப்போகும் என்கிறார் மகான் பசவர்.

''துறையில் நீராடும் அண்ணன்மாரே! துறையில்
நீராடும் தலைவர்களே!
துறக்கவேண்டும் துறக்கவேண்டும்
பிறன்மனை கூடல் துறக்க வேண்டும்.
இவை துறக்காது போய்த் துறையில் மூழ்கி
னால்
புண்ணியத் துறையும் வற்றிப்போம், கூடல
சங்கமதேவா''
(வசவண்ணர் வாக்கமுது 177)

இறைவனையும் அடியாரையும் ஒன்றே போல் மதிக்கும் மகான் பசவர் இறை அடியாரின் துணைவியரையும் இறையம்சமாகவே கூறுவர். இறையடியாரின் துணைவியரைத் தாயாகத்துதிக்க வேண்டுமே தவிர தாரமாக எண்ணக் கூடாது. அவ்வாறு எண்ணுவாரின் தலையைச் சிவபெருமான் பறித்துவிடுவான் என்று அருளியுள்ளார் மகான் பசவர்.

''இறைவரும் அடியவரும் ஒன்றென் றறிந்தபின்
அவர்மனை வியரும் இறைவனில் வீற்றிருப்பர்
அங்கும் திருக்கூட்டம் இங்கும் திருக்கூட்டம்
தாயெனும் நினைவு மறந்து தழுவினால்
அவர் தலையையே கொள்வான் கூடல சங்கம
தேவன்''
(வசவண்ணர் வாக்கமுது 178)

சாளுக்கிய மன்னன் விச்சலனின் தலைமை அமைச்சராகிய மகான் பசவர் சிவானுபவ மண்டபம் ஒன்றும் கலியாணியில் அமைத்திருந்தார். அம்மண்டபத்தில் ஆண் சரவணர்களுடன், அறுபதுக்கு மேற்பட்ட பெண் சரணர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். அவ்வாறான அமைப்பில் தீய எண்ணம் தவறியும் எவருக்கும் ஏற்படக் கூடாதென்பதற்காகவே மகான்பசவர் பிறன்மனை விழையாமையைப் பெரிதும் வற்புறுத்தி அருள் மொழிகளை அருளியிருக்கக் காண்கிறோம்.

சரணர்க்கு மட்டும் பிறன்மனை அச்சத்தை வலியுறுத்தினாரில்லை. தாமும் பிறன்மனை விழையாமையைப் பெரிதும் போற்றுவதாக அம்மகான் தெரிவித்துள்ளார்.

''பாய்ந்துவரும் பாம்பினுக் கஞ்சேன், தீயின்
நாவுக்கஞ்சேன்
கூர்வாள் முனைக்கு மஞ்சேன் ,ஆயினும்
ஒன்றுக்கஞ்சுவேன், ஒன்றுக்கு நடுங்குவேன்
பிறன்மனை ,பிறன்பொருள் எனும் சூதுக்
கஞ்சுவேன்
முன்பு, அச்சமற்ற இராவணன் என்னவா
னான்?
அஞ்சுவேன் ஐயா கூடல சங்கம தேவா!
(வசவண்ணர் வாக்கமுது 157)

தாமும் ஒழுக்க நெறி நின்று பிறர்க்கும் ஒழுக்க நெறிஉரைத்த உத்தமர்கள் வாக்கின் வழி நின்று நாமும் வாழ்வோமாக.




—வித்யாதீர்த்ததாசன்

கோதை பிறந்த ஊர்:கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றுமூர்-நீதியார்
நல்லபத்தர் வாழுமூர்; நான்மறைகள் ஓதுமூர்
வில்லிப்புத்தூர் வேதக் கோனூர்

எனப் பேரும் புகழும் பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர் சித்தத்தைத் திருமாலின் பேரில் வைத்ததால்விட்டுனுச்சித்தர் என்ற காரணப்பெயருடைய பெரியவர். திருமாலின் அழகில் மயங்கி பல்லாண்டு வாழவேண்டும் என வாழ்த்திய காரணத்தால் பெரியாழ்வார் என அழைக்கப்பட்டார். கண்ணனைக் குழந்தை உருவில் கண்டு பாலூட்டித் தாலாட்டி வளர்த்த தாயின் நிலையிலிருந்து பல பாசுரங்கள் பாடியருளியவர். கண்ணனை மகனாக வளர்த்த அவருக்கு இறைவன் திருவருளால் தமிழ்மொழியின் தொண்ணூற்றாறு விதமான பிரபந்தங்களில் பிள்ளைத்தமிழ் பாடும் பேறு கிடைத்தது. உலகத்தில் முதல் பிள்ளைத் தமிழ் பாடிய பெருமை பெரியாழ்வாரையே சேரும்.

இத்தகைய பக்தர் துளசி எடுக்க நந்தவனத்திற்குச் சென்றபோது கண்டெடுத்த குழந்தையே சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற ஆண்டாள். இறைவனான திருமாலுக்குப் பூமாலையும் பாமாலையும் சூட்டிய இவரைக் கோதை என்றே அழைத்தனர். இறைவனான கண்ணனை மானசீகமாக வளர்த்துப் பிள்ளைத் தமிழ் பாடிய இவரிடம் உண்மை யாகவே பூமி தேவியின் அம்சமான ஆண்டாள் வளரும் படியாக நேர்ந்தது. திருமாலுக்குச் சேவைசெய்து பூமாலைகளும் பாப களும் சூட்டிய பெரியாழ்வாரால் வளர்க்க எந்நேரமும் இறைவனின் சிந்தனை யாகவே அம்மை இறைவனையே தன் கணவனாக அடை வேண்டுமென்று ஆசை கொண்டாள். மனிதருக்கு என்னை வாழ்க்கைப்படுத்துவது என்றால் என்னால் வாழ இயலாது (மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்) எனத் தீவிரமான பக்திக்காதல் கொண்டாள். அத்தகைய பெருமாளை நாயகனாக அடைய வேண்டுமென்ற பக்திக் காதலின் உணர்ச்சியின் வெளிப்பாடே திருப்பாவைப் பாசுரங்கள். பாவங்களைத் தீர்த்துப் பரமன் திருவடியில் சேர்க்கும் வேத சாரமான திருப்பாவையின் முப்பது பாசுரங்களை யறியாதவனின் உலகவாழ்வு வீணானதே என்பது பெரியோர் கொள்கை.

இறைவனையே நாயகனாகவும் உலகிலுள்ள அனைவரையும் பெண்களாகவும் எண்ணி அத்தகைய நாயகனை அடைய வேண்டுமென ஒவ்வொருவரும் ஏங்கி வணங்கவேண்டும் என்பது பெரியோர் காட்டிய வழி. உலக வாழ்வில் இப்பாசுரங்களைப் பொருள் தெரிந்து தினமும் படிப்பவர்கள் நல்ல கணவனை அடைவர் என்பர்.

### 1. மாதங்களில் அவன் மார்கழி

எல்லாவற்றிலும் கண்ணனைக் கண்டவர் நம் முன்னோர். ''மாதங்களில் நான் மார்கழி'' என்பது கீதையில் கண்ணனின் வாக்கு. எனவே திருப்பாவையைக் கண்ணனின் பெயரைக் கூறுவதாக ''மார்கழி'' என ஆரம்பித்தார். சந்திரனை வைத்துத்தான மாதங்களுக்குப் பெயர் வந்தது. சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடிய மாதம் சித்திரை மாதம். மிருகசீர்ஷமும் பௌர்ணமியும் கூடியது மார்கழியாயிற்று. குளிர்ச்சியான நாளில் கோபமும் பொறாமையுமான வெப்பமான குணங்கள் கூட மாறி சத்துவகுணம் மேலோங்கும். எனவே அக்குளிர்ச்சி பொருந்திய நேரம் நல்ல நினைவுகளை உண்டாக்கும், புத்தியளிக்கும். மேலும் மார்கழிமாதம் என்பது தேவர்கட்கு விடியற்காலம் என்பா. இறைவனை நினைப்பதற்கான நல்ல நாளில் அவனைப் பற்றிப் பேசாதவர் நாளெல்லாம் பிறவா நாளே என்பது ஆன்றோர் கொள்கை. எனவே ''மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்!'' என்றார். உடலழுக்குப் போக நீராடுவது மட்டுமன்று. இறைவனது நற்குணங்களாகிய கடலில் ஆடி உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பது குறிப்பு. இயன்றவர் நீராட வரலாம்! வரவேண்டுமென்று எண்ணமிருந்தாலே நீராடி அழுக்குப் போனமாதிரி என்பது குறிப்பு. கண்ணன் வருகையை எதிர்பார்த்து பல அணிகளை அணிந்துகொண்டுள்ள அவர்களின் பக்தியை எண்ணி பக்தி, வினயம் ஆகிய நற்குணங்களாகிய அணிகளையும் அணிந்தவர்களே! ''நீராடப்போதுவீர்! போதுமினோ! நேரிழையீர்'' என அழைத்தார்.


கண்ணன் திருமாலன்றோ? பாற்கடலில் பள்ளி கொண்டவன், பால் நிறைந்த ஆயர்பாடியான கோகுலத்திற்கு வந்துவிட்டான். கண்ணனின் வருகையால் சீர்பெற்ற ஆயர்பாடியில் அவனை வணங்கும் செல்வம் பெற்றுவிட்டனர். சிறுமிகளுக்குக் கூட அவனை வணங்கும் செல்வம் கிட்டிவிட்டது. செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம் என்றபடி இறைவனை வணங்கிய 'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!' என்றார். கண்ணன் பிறந்த நாள் முதல் அவனை அழிக்கப்பூதகி, சகடாசுரன் போன்றவர் வந்து விட்டனர். எந்த நேரத்தில் குழந்தைக்கு என்ன நேர்ந்து விடுமோ என எண்ணிய நந்த கோபன் இடையர் குலத்திற்கே


இயற்கையான சாந்தகுணம் மாறி, தன்கையில் வேலை எடுத்து, ஈ, எறும்பு போன்ற எந்த உருவத்தில் தன் குழந்தையைக் கொல்ல எதிரிகள் வந்து விடுவாரோ என எண்ணி, எல்லாப் பிராணிகளையும் கொன்றுவிடலாமென்ற கொடுந்தொழில் பூண்டவனாகி விட்டானாம். அவனெதிரிலே தந்தைக் கடங்கிய சாதுக் குமரனாக விளங்குகிறானாம் கண்ணன். 'கூர்வேல் கொடும் தொழ்லன் நந்த கோபன் குமரன்' என்கிறார். கண்ணனின் அழகிலே ஈடுபட்டு யசோதையின் கண்கள் அழகு பெற்று விட்டனவாம். தந்தையிடம் அடங்கிய குமரன் தாயிடம் அடங்காத சிங்கம் போன்றுள்ளான். ஏரார்ந்த கண்ணி 'யசோதை இளஞ்சிங்கம்' தன் கரிய திருமேனி, வேண்டும் போது நாட்டுக்கு மழையளிக்கும் மேகத்தை நினைவூட்டி, தன் அடியாருக்குக் குளிரக் கடாட்சிக்கும் கண்களால் அல்லாதவருக்கு இடையூறு செய்யும் கோபத்தையுடையுடைய செங்கண் உடையவனாகத் தோன்றுகிறான். தன் அடியவருக்குக் குளிர்ச்சியைச் செய்வதால் சந்திரன் போன்றும் அல்லாதவருக்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் வெப்பமான சூரியன் போன்ற முகத்தை உடையவன். 'கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தானாகிய நாராயணனே நமக்கே பறைதருவான்'. பறை என்பது நோன்பிற்கான ஒரு வாத்யம். அவனைப் பூசிக்க வேண்டிய கருவிகளையும் அறிவு, ஒழுக்கம் முதலியனவற்றையும் தருவான். நாராயணனே என்றதால் கொடுக்கக்கூடிய அவனே நமக்குக் கொடுப்பான் என்றும் என்றும், எளியவர்களான போதிலும் நாம் உண்மையன்பு உடையவர்களானபடியாலே நமக்குத் தருவான் எனக்கூறினார். நாராயணனே நமக்கே எனக் கூறுவதால் முதற்பாட்டிலேயே இறைவனின் எட்டெழுத்து மந்திரத்தையும் தொனிக்கவைத்துப் பாடினாள். திருமாலைப் பணிந்து புகழ்வதால் உலகம் நம்மைப் புகழும்; எனவே அவனைப் புகழ்ந்து பாடியருள் பெறுவோம் என்றார் முதற்பாட்டிலே.

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்
'நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் பணிந்தேலோர் எம்பாவாய்!

## 2. உயர்வு பெற எண்ணி உவப்பன செய்வோம்

இறைவனான திருமால் கண்ணனாக வந்துள்ள காலத்திலே தோன்றியுள்ளோம். நெருப்புச் சட்டியிலே தாமரை பூத்தமாதிரி கண்ணன் இந்தக் கர்ம பூமியில் வந்துள்ளானே! ஆணாகவோ வயது முதிர்ந்த பெண்ணாகவோ பிறந்திருந்தால் கண்ணனை மகூதால் கூட எண்ண முடியாதே. நாம் பாக்யசாலிகள்! வாழப்பிறந்தவர்கள்! என்பதால் 'வையத்து வாழ்வீர்காள்!' என விளித்தாள். நம் விரதத்திற்காக நாம் செய்ய வேண்டிய செயல்கள் என்ன வென்று கேளுங்கள்! கண்ணன் வசிக்கும் கோகுலம், கோபியின் கண்களுக்குப் பாற்கடலாகவே தோன்றுகின்றது. கண்ணன் மெல்லத் தூங்குகின்றானாம். மலையென விழிதுயில் வளரும் மாமுகில் என்பார் கம்பர். எந்த நேரத்தில் யார் கூப்பிட்டுவிடுவாரோ எனப் பையத் துயிலுகிறான் பரமன். தன் பரமபதத்தை விட்டுத் தனது அடியாருக்காக இரங்கி இறங்கி இக்கர்ம பூமியில் கால் கடுக்க மண் வழி நடந்து அடி வருந்த





வரும் அவனது கருணை நிறைந்த திருவடிகளைப் பாடிப்பரவுவோம். குழந்தைக்குப் பெற்றதாயின் மார்பே தாரகம் என்பது போல அடியாருக்கு அவனது திருவடியே முக்கியமானது என்பது குறிப்பு. உடல் உரம் பெறுவதற்காக உண்ணும் நெய்யையும் பாலையும் கூட உண்ணவேண்டா. ''உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்'' எனக்காணும் இவர்கட்கு ஆகாரமே தேவையில்லை. பின்னர் கண்ணுக்கு மையிடுதல், கூந்தலில் மலர்வைத்தல் ஆகியவற்றையும் நீக்கிவிடுவோம்! கரிய திருமேனியழகனான அப்பெருமாளைக் கண்டால் நமக்குக் கண்களில் மையிட்ட மாதிரி அழகுவந்து விடுமே! செயற்கை மை எதற்கு? அப்பெருமானது வாடாத திருவடிமலரைச் சூடவேண்டிய நம் முடிக்கு வாடும் மலர் வேண்டாவே! அதுமட்டுமல்ல! நம் கண்ணனுக்கான திருவாராதனைக்கான மலரை நாம் எதற்கு அலங்காரப் பொருளாக ஏற்க வேண்டும்! நாம் மலரணிந்து கொள்ள வேண்டும் என அவன் எண்ணினால் நாம் முடிந்து கொள்ள வேண்டாம். அவனே வந்து நம் கூந்தலில் மலரைச் சூட்டி அழகு பார்க்கட்டுமே! கண்ணனின் அடியவர்களான நாம் செய்யத் தகாத காரியங்களை நீக்குவோம். தனக்கு இராமபிரானே அரசைத்தந்தும் வசிட்டர் அதனை ஏற்குமாறு கூறியும் மறுத்த பரதன் போல,! மூத்தவன் இருக்க இளையவன் அரசை ஏற்பது செய்யத் தகாத செயலன்றோ? கூரத்தாழ்வாரிடம் ''தாங்கள் ஏன் திருமாலை வணங்கவில்லை?'' எனக் கேட்ட அன்பர்களிடம் ''என் முன்னோர்கள் செய்யவில்லை. அதனால் நான் செய்யவில்லை' என்றாராம். முன்னோர்கள் செய்யவில்லை என்றால் நாம் செய்யக்கூடாது என்பது குறிப்பு. (செய்யாதன செய்யோம்) பிறரைப்பற்றிக் கோள் சொல்ல மாட்டோம். கோள் சொற்களைக் கேட்க மாட்டோம். இறைவனை வைக்க வேண்டிய தூய்மையான இதயத்தில் கோள் சொல் முதலானவை

இருந்தால் தூய்மை குறைந்துவிடும் எனவே இதய சுத்தத்தை முன்னிட்டுக்கோள், கடுமையான சொற்களைக் கூறவோ, கேட்கவோ மாட்டோம். (தீக்குறளைச்சென்றோதோம்). ஐயம் என்பது நாம் நல்லோரை அழைத்துத் தரும் அன்பு மிகுந்த காணிக்கை-சன்மானம் - நன்கொடை. பிச்சை என்பது நம்மிடம் பிறர்வந்து பிடிவாதமாக யாசிப்பது. ஐயம் -பிச்சை இரண்டையும் செய்தோம் என்ற ஆணவ எண்ணமில்லாது முடிந்ததைக் கை காட்டி நல்வழியில் நடந்து நாராயணனான கண்ணனை அடைவோம். முதற்பாட்டில் நாராயணன் என நின்ற வண்ணத்தைப் பாடியவர் இந்தப் பாடவில் பாற்கடலில் பையத்துயின்ற பரமன் எனக் கிடந்த வண்ணம் பாடினார். அத்தகைய பரமன் கர்ம பூமியில் கண்ணனாக வந்துள்ளான். அவனை பாடிப்பரவி வணங்கி உய்ய வேண்டிய நேரம் இது. மேய்ச்சல் தரைக்கு வந்த ஆடு நன்றாக மேய்ந்து வயிற்றை நிரப்பிக்கொள்ளுமே தவிர அங்கு படுத்து அசைபோடாது. அதுபோல் அயர்ந்து தூங்கக் கூடிய நேரமல்ல இது. எழுந்து கண்ணனை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து உடலினால் வணங்க எழுந்திரு'' என்கிறார்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ? பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம்! பாலுண்ணோம்! நாட்
காலே நீராடி
மையிட்டெழுதோம்! மலரிட்டு நாம் முடியோம்!
செய்யாதன செய்யோம்! தீக்குறளைச்
சென்றோதோம்!
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்

### 3. நிற்கின்ற செல்வம் நிறைக!

ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் மாறிச் செல்வதாலே செல்வத்திற்குச் செல்வம் எனப் பெயரிட்டனர் பெரியோர். இறைவனது அருள் பெற்று நற்கதியடைவதையே நிற்கின்ற செல்வம் எனக் குறித்தார் கம்பன். மூன்றாவது பாவைப் பாடலில் இதை நீங்காத செல்வம் எனக் குறித்தார் ஆண்டாள்.

பிறரிடம் ஒன்று வேண்டுமென்று யாசிப்பது மிக்க கேவலமானது. ஏற்பது இகழ்ச்சி என்றார் ஔவை. திருமகள் உலகுக்கெல்லாம் பொன்னைப் பொழியும் தாய். அவளது நாயகனான திருமால் தேவரைக் காக்கவேண்டும்-அரக்கனான மகாபலியினிடமிருந்து தேவருலகத்தை விடுவித்து தேவராசனிடம் அளிக்க வேண்டும் என எண்ணினான். நரசிம்மாவதாரம் செய்த போது பிரகலாதனிடம் அவனது பக்திக்கு மெச்சிய இறைவன், ''உன் குலத்தில் பிறப்பவர் எத்தனைக் குற்றம் செய்தாலும் அவரைக் கொல்லமாட்டேன்'' என வரமளித்து விட்டார். மகாபலி பிரகலாதனின் பேரன். அவனைக் கொல்ல முடியாது. எனவே அவனிடம் மூவடிமண் வேண்டுமெனக் கையேந்தி விட்டார் திருமால். திருமகள் நாயகனான தான் பிறரிடம் கையேந்தி நிற்பதை எண்ணியதும் இறைவன் உடல் குறுகி எட்டுச்சாண் உடல் ஒரு சாணாகி விட்டதாம். வாமனாவதாரத்தில் இறைவன் குறுகிய உருவத்துடன் வந்ததற்கு இதுதான் காரணம். முதற் பாட்டில் நாராயணன் என்று நின்ற வண்ணம். பையத்துயின்ற பரம என இரண்டாவது பாட்டில் கிடந்த வண்ணமும் கூறி, மூன்றாவது பாட்டில் திருமகள் நாயகனான தன் செல்வ நிலையையும் விட்டுத் தேவரைக் காப்பதற்காகக் கையேந்தி வந்த கருணையை 'ஓங்கி உலகளந்த உத்தமன்' எனக் கூறினார். நல்லவர் பெயரைக் கூறுவது நன்மை பயக்கும் என்பதால் பேர்பாடி என்றார். இறைவன் பெயர் பாடி நீராடினால் நாடு பூராவும் மாதம் மும்மாரி மழை பொழியும். வாமன மூர்த்தியான உத்தமன் வளர்ந்த காலத்தில் அவனது திருவடியைத் தன் கையிலிருந்த கிண்டியின் நீரால் பிரமன் விளக்க அந்த நீரே கங்கையாக வந்தது. உலகத்திற்குக் கங்கையை அளித்தவன் மும்மாரி பொழிந்து நாடு செழிக்க உதவுவான் என்பது குறிப்பு. இந்த உத்தமனால் திருவடிபெற்ற மகாபலியோ, அரசுபெற்ற இந்திரனோ அவனைப்பாடவில்லை. இந்த அவதாரத்தினால் உலகிற்கு கங்கை கிடைத்தால் நாம் பாடுவோம் என்கிறார். ஒன்பது நாள் வெய்யில் அடித்தால் பூமி தாங்காது. ஆதலால் பத்தாவது நாள் கட்டாயம் மழை பெய்யும். அதனாலேயே நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து என்றார். மழை தவறாதிருந்தால் நாடு செழிக்கும். செழுமையான நாட்டில் திருடு கிடையாது. செழுமையற்று பஞ்சம் ஏற்பட்டால் திருட்டுப்புத்தி தோன்றும். செழுமையும் செல்வமுமுள்ள நாட்டில் பிணியும் வராது. அதனைப் தீங்கின்றி எனக் குறித்தார். வாமனாவதாரத்தில் இறைவன் தீங்கிழைக்காதபடி மகாபலிக்கும் நற்கதியளித்து இந்திரனுக்கும் அரசளித்து உலகிற்கு கங்கையுமளித்து விளங்கியமை தீங்கின்றி நாடுக்கெல்லாம் மூன்று விதமாக அருள்மாரி பொழிந்தார் எனத் தொனிப் பொருள் வைத்தார். வாமனாவதாரத்தில் இறைவன் எவரையும் அழிக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கதொரு சிறந்த செய்தி. மழை வளங்காரணமாக நெற்பயிர் வளர அதன் இடுக்குகளிலே மீன்கள் தாவி வளர்கின்றன. குவளை மலர்களில் வண்டுகள் உறங்குகின்றன. இவ்வாறு புல்வளம் நிறைய பசுக்கள் நன்கு மேய்ந்து நாட்டில் பால் வளம் மிகுந்து விளங்குகின்றது. குடம் நிறையப் பால் தரும் பசுக்களை 'வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' என்கிறார். பசுவின் பால் தேவர்களுக்கு ஆகுதி செய்யக்கூடிய நெய்யைத் தருகின்றது. தேவர்களுக்கான ஆகுதியை மந்திரப்பூர்வமாக அந்தணர்கள் வழங்க தேவர்களின் மகிழ்ச்சி காரணமாக மழை பெய்து நாடு செழுமையடைகிறது .இதனாலேயே


வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக

எனக்கூறிப் போந்தனர் நம் முன்னோர். இறைவனுக்கு மந்திரங்கூறி ஆகுதி செய்யும் அந்தணரை வாழ்த்தினர். சாதிக்காக அன்று. அவரது கடமைக்காக. அவ்வாறு மழைபெய்ய, நானிலம் செழிக்க, அரசாங்கம் மேன்மைபெறுகிறது. அத்தகைய செழுமையான நிலையில் தீயதெல்லாம் மறைய இறைவனின் நாமம் உலகம் பூராவும் பரவுகின்றது. எனவே பாவையர் இறைவன் நாமம் பாடி மழை வரவேண்டி, அதன் மூலம் என்றும் நீங்காத இகம், பரமான சுகங்களையடைய முயற்சி செய்கின்றனர்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்
பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

(தொடரும்)

# நளமகா சரிதம்



கம்பன் கவிநயமணி **வே. தியாகராஜன்**

மூவுலகும் சுற்றித்திரியும் நாரத மகரிஷி தமயந்தியைப் பற்றி அறிந்து அவளைப்பற்றித் தேவருலகத்தில் சென்று அவளுக்குச் சுயம்வரம் என்பதையும் தெரிவிக்கிறார். அனுமான் வாலில் தீ வைக்கப்பட்டபோது சீதாபிராட்டி அழற்கடவுளான அக்னியை நோக்கி 'அவரைச் சுடாதே' என வேண்டினாள். உலகில் இருந்த தீயுள்ள இடங்களெல்லாம் குளிர்ந்தன எனக் கூறவந்த கம்பன் 'அக்கினியின் உருவமான சிவபெருமானின் நெற்றிக்கண் கூடக் குளிர்ந்துவிட்டது. "முப்புரம் முருங்கச் சுட்ட கொற்றவன் நெற்றிக் கண்ணின் வன்னியும் குளிர்ந்த அன்றே" என்றார் கவிச்சக்ரவர்த்தி. புகழேந்திப் புலவர் "நாரதரது இனிய வீணையின் இசை சிவபெருமானின் நெற்றிக் கண்ணையும் குளிரவைத்துவிடும்' "நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும் கொற்றத்தனியாழ்க் குலமுனிவன்" எனக் கூறி நாரதரின் நயமிகுந்த இசைப் புலமையையும், கோபமே உருவான கடவுளின் கோபத்தையே தணித்துக் குளிரச் செய்யும் என இசையின் பெருமை இறைவனையும் மயக்கக் கூடியது என முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழின் பெருமையைக் கூறினார்.

நாரதர் மூலமாக தமயந்தியைப் பற்றிக் கேள்விப்பட்ட இந்திரன் முதலானவர்கள் தமயந்தியைத் திருமணம் புரிந்து கொள்ள எண்ணி "நமக்கு அவள் மாலையிடுவாளா?" என்ற ஏக்கத்துடன் குண்டினபுரம் நோக்கி வரும் வழியில் நளன் அவர்களைக் கண்டு வணங்கினான். இந்திரன் "எனக்கொன்று அளிப்பாயா?" என நளனிடம் கேட்க "ஒருவர் கேட்குமுன் குறிப்பறிந்து கொடுத்தலே கொடை. கேட்டபின் கொடுப்பது உயர்வில்லை" எனக் கூறினான்.

குறிப்பறிந்து ஈதலே கொடை; மற்று இன்றென
மறுத்தலே கேட்டபின் வழங்கல் ஆதலின்
பெறற் கரும் ஆவியும் பெட்பின் ஈகுவன்
திறப்பட இவருளம் தெரிந்ததில்லையால்.

தன் உயிரைக் கேட்டாலும் கொடுத்து விடுவது எனத் தீர்மானித்தான் நளன். கொள்வது தீது: கொடுப்பது நன்று என்பது ஆன்றோர் வழக்கன்றோ? தேவேந்திரனே நம்மிடம் எதையோ விரும்பி நமக்குப் பெருமை அளிக்கின்றானே என மகிழ்ந்தான். ஏழைக்கு இப் பிறப்பில் அளிக்கும் பொருள் மறு பிறப்பில் திரும்பி வருமாதலால் யாசகர்கள் உறவினர்களைக் காட்டிலும் இனிமையுடையவர்கள் என்கின்றார் அதிவீரராமப்பாண்டியன்.

"நள! வீமன் மகளான தமயந்தி எங்களில் ஒருவருக்கு மாலையிட வேண்டுமென நீ தூது செல்ல வேண்டும்" என இந்திரன் நளனிடம் கேட்டான்.

செங்கண் மதயானைத் தேர்வேந்தே!
தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்-மங்கைபால்
தூதாக என்றான்; அத்தோகையைத் தன்னா
கோதாக வென்றான் அக்கோ. [கத்தால்


தான் விரும்பிய பெண்ணை இந்திரன் விரும்புகிறான் என்பதை அறிந்த நளன் கோபமோ பொறாமையோ கொள்ளவில்லை. தான் இந்திரனுக்கு அளித்த சொல்லைக் காக்க வேண்டும் என்பதுடன் தனக்கு அவள் உபயோகமாகாள் எனத் தீர்மானித்துவிட்டான்.

தனது காதலுணர்வையே வென்ற நல்லோனாகிய நளன் "தமயந்தியின் கன்னிமாடத்துள் எவரும் காணாதபடி எவ்வாறு நுழைவது?" எனக் கேட்க இந்திரன் பிறருடைய கண்களுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்ளும் சக்தியளிக்கும் மாலி காஞ்சனம் என்ற மந்திரத்தை உபதேசித்து அனுப்பினான்.

குண்டினபுர அரண்மனை அந்தப்புரத்தில் நுழைந்த நளனைத் தமயந்தி கண்டு கொண்டு "காவல் கடந்து இக்கன்னிமாடத்துள் புகுந்துவந்த நீர் தேவரா? மாயாவியான வித்யாதரனோ? கூறும்" என்றாள்.

தனது காதலை அறிவாகிய தண்ணீர் விட்டு அணைத்தவனான நளன், தான் இன்னான் என்பதை கூறியதுடன் தேவர்களின் தூதனாகத் தான் அங்கு வந்ததாகக் கூறினான். இந்திரனுக்கு மாலை சூட்டுமாறு தமயந்தியிடம் நளன் கூற "சுயம்வரமே தங்கள் பொருட்டுத்தான் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் சுயம்வரத்திற்கு வரவேண்டும்" எனத் தமயந்தி வேண்டிக் கொண்டாள். நளன் தேவேந்திராதியரிடம் திரும்பி வந்து எதையும் ஒளிக்காது கூறினான். மகிழ்ச்சியடைந்த தேவர்கள் வரங்கொடுத்தனர்.

இந்திரன் நளன் செய்யும் யாகங்களில் நேரே வந்து தோன்றி அவிர்ப்பாகத்தை ஏற்றுக் கொள்ளுவதாகவும், அக்கினி, நெருப்பில்லாமல் உணவு சமைக்கும் தன்மையை அளித்தான் என்றும், யமன் சத்ருக்களை வெல்லத்தக்க வலிமை பொருந்திய ஆயுதங்களைக் கொடுத்தான் என்றும் வருணன் மாலை வாடாதிருக்கவும், கடலை வற்றச்செய்யவும், நீரில்லா இடத்து நீருண்டாக்கும் சக்தியை முறையே அளித்தனர். நளனுக்கும் தமயந்திக்கும் வேண்டும்போது வேண்டும் உருவம் கொள்ளவும் தமயந்தியை கற்பழிக்க எவராயினும் முயற்சி செய்தவர் அழியவும் வரங்கொடுத்தனர் என்று நைடதம் கூறுகிறது.



நளன் தேவர்கள் சார்பில் தன்னிடம் தூது வந்து போனபின் தமயந்தி மிக வருந்தினாள். நளனைத்தவிர வேறு யாரையாவது தான் கணவனாக ஏற்குமாறு நேர்ந்தால் நெருப்பிலோ நீரிலோ வீழ்ந்து விடலாமே என எண்ணினாள். நெருப்பில் விழுந்தால் அக்னியை அடைந்தது போலாகும். நீரில் விழுந்தால் வருணனையடைந்தது போலாகும். நளனையே அடைந்தால் கூட அக்னி வருணன் இருவருடைய உதவியின்றித் திருமணம் நடைபெறாது அன்றோ? திருமணம் என்பது அக்னி சாட்சியாக நீர்வார்த்துத்தரும் சடங்கன்றோ? எனவேதான் நளனை மணம்புரிந்து கொண்டால் கூட அக்னியும் வருணனும் திருமணத்திற்கு வருவர். எனப் பலப்பல எண்ணி வாடி உளம் வருந்துகிறாள் தமயந்தி. 'அவள் துன்பமும் நீங்கவில்லை. இரவும் விடியவில்லை. வேலைக்கையில் கொண்ட நள மகாராசனும் கருணை செய்யவில்லை! ஏ, சங்கே! நாரையே! அலையே! கடலே'' என அருகிலுள்ளவற்றைக் கண்டு புலம்பிக்கொண்டிருந்தாள்.

> இடரோ தவிரா! இரவோ விடியா!
> தடல் வேலவர் தாம் அருளோ புரியார்!
> குடவால் வளையே! குருகே! திசையே!
> கடலே! கழியே! இதுவோ கடனே.

மணமுரசு முழங்கியது. பொழுது விடிந்தது. அரசர்கள் சுயம்வர மண்டபம் நோக்கி வருகின்றனர். இமையாது பார்த்தவர்கள் கண் இமைக்காத தேவர்கள் போலாகிவிட்டனர். மன்மதன் தன்னைக் காட்டிலும் அழகான நளனைக் கண்டு வெட்கப்படவில்லை. சிவபெருமான் தன் உருவம் உலகிற்குத் தெரியாத வண்ணம் உருவமில்லாதவனாக செய்தது கண்டு அவன் மகிழ்ந்தான். இந்நிலையில் தமயந்திக்கு அலங்காரம் செய்தனர். தமயந்தி அணிந்து கொண்டதால் ஆபரணங்களுக்கு அழகு வந்துவிட்டது என்கிறார் கவிஞர்.

தோழி ஒருத்தி தமயந்திக்கு எல்லா அரசர்களையும் காட்டி விவரம் கூறினாள் என நள வெண்பா ஆசிரியர் கூறுகிறார். கலைமகளான சரஸ்வதி தமயந்திக்கு அரசர்களைக் காட்டி அவர்களது பெருமையை உணர்த்தினாள் என்கிறார் அதிவீரராமபாண்டியன்.

அந்நிலையில் அந்தச் சபையில் இந்திரன்-யமன்-அக்னி-வருணன் நால்வரும் நளன் வடிவமே கொண்டு அமர்ந்திருந்தனர்.

சிறிது திகைத்த தமயந்தி, இறைவனை தியானித்து ''நான் வீமராஜனின் சத்யமுள்ள குலத்தில் பிறந்து நற்குணமுள்ளவள் '' என்பது உண்மையானால், நள மகாராசனுக்கே மாலைசூட வேண்டும் எனக்கு அருள் புரிக'' எனவேண்டினாள். நளனை ஒத்த உருவமுடைய நால்வர் எதிரிலே நின்ற தமயந்தி, உண்மையான நளன் எதிரிலே வர ''இவரது கண்கள் இமைக்கின்றன. திருவடிகள் பூமியில் படுகின்றன. கழுத்தில் உள்ள மாலைகள் வாடுகின்றன. எனவே இவர்தான் நளமகாராசர் என நன்கு அறிந்து, ஏனைய அரசர்கள் ஏமாந்து வெட்கப்பட, உலகுமகிழ, மற்றவர்கள் தமக்குத் தமயந்தி கிடைக்கவில்லையே என மயங்க, நளன் திருக்கழுத்தில் மாலை சூட்டினாள் தமயந்தி.

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனம்சுளிக்க
கண்ணகல் ஞாலம் களிகூர-மண்ணரசர்
வன்மாலை தன் மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

திருமணம் நன்கு நிறைவேறியது. ஏனைய அரசர்கள் பொறாமையால் போர் செய்தனர் என்ற வரலாற்றை நளவெண்பாவில் காணோம்.

நளன் தமயந்தி திருமணத்திற்குப் பின் தேவர்கள் தம் நாடுதிரும்பியபோது, எதிரில் கலிபுருஷனைக் கண்டனர். திருமணம் முடிந்து விட்டது என்பதை அறிந்த கலிபுருஷன் கோபம் கொண்டு நள தமயந்தியரைப் பிரிப்பதாகக் கூறுகிறான். நற்குணமே உருவமானவர் நள தமயந்தியர் என அவனிடம் இந்திரன் கூறுகிறான்.

வாய்மையும்; செங்கோல் வளனும்; மனத்தின் கண்
தூய்மையும்; மற்றவன் தோள்வலியும்-பூமி
நெடுங்கற்பும்; மற்றவற்கு நின்றுரைத்துப்
அருங்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு[போனான்

எனினும் நள தமயந்தியரைப் பிரிப்பதாகத் தீர்மானம் செய்து விட்டான் கலிபுருஷன். நள தமயந்தியர் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பல வருடங்கள் நள தமயந்தியர் இன்புற்று வாழ்ந்தனர்.

நளன் தனது நாட்டில் தன் அருமை மனைவியான தமயந்தியுடன் பன்னிரண்டு வருடங்கள் இன்பமான வாழ்க்கை நடத்தினான். இரண்டு மக்கள் பிறந்தனர். நளன் ஒழுக்கம் தவறாது நீதி நேர்மையுடன் அரசு புரிந்ததால் அவனைக் கலிபுருடன் பிடிக்க முடியவில்லை. தருமம் உள்ள இடத்தில் எந்தக் கெடுதலும் வர இயலாது என்பது குறிப்பு.

நளன் ஒரு தினம் மாலை வணக்கம் (சந்தியா வந்தனம்) செய்வதற்காக கால்களைக் கழுவும் போது சரியாகக் கழுவவில்லை. அந்தக் குற்றம் காரணமாக நளனைச் சனி பீடித்தார். இறைவனது நாமம் கூறாதவரைத் துன்பம் பிடிப்பது போல் கலி நளனைப் பீடித்தான் என்கிறார் கவிஞர்.

நாராயணாய நம என்று அவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்-பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

புட்கரன் என்ற ஒரு சிற்றரசனிடம் கலிபுருடன் சென்று நளனது அரசை அவனுக்கு வாங்கியளிப்பதாகக் கூறி நளனிருக்குமிடத்திற்கு அவனை அழைத்து வந்தான். சூதாட்டத்தில் வல்லவனான புட்கரன் ஒரு கொடியுடன் நளனெதிரில் வர, ''இது என்னகொடி?'' என நளன் கேட்டான். ''என்னை எவரும் சூதாட்டத்தில் வெல்ல முடியாது என்பதற்காகவே இக்கொடி ஏந்துகிறேன்'' எனப்பதில் கூறினான் புட்கரன். நளன் அவனது இறுமாப்பை அடக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ''என்னுடன் சூதாடவல்லாயோ?'' எனக்கேட்க, பக்கத்திலிருந்த மந்திரிகள் நளனை நோக்கி ''பெண்ணாசை, சூதாடல், கள்ளுண்ணல், பொய்கூறல், பிறருக்கு ஈயமறுத்தல் முதலானவை நீதி தவறினவர்களின் குணங்களாகும். சூது, அழகு, பெருமை, கீர்த்தி, செல்வம், மானம், அன்பு யாவற்றையும் அழித்து விடும். தாசிகள் உறவை உடையவரும், சூதில் ஆசை வைத்தவரும் வஞ்சகர்களே யாவர். தருமத்தை அழித்து நரகத்தில் மனிதரைத் தள்ளி, கருணை என்ற குணமே இல்லாமல் செய்து உலகத்தவரின் விரோதத்தை உண்டாக்கும்'' என்று மந்திரிகள் பல விதமாகச் சூதின் கெடுதல்களைக் கூறவும் நளன், கலியின் சூழ்ச்சி காரணமாக, அவர்களது புத்திமதிகளை ஏற்கமறுத்தான். நளன் புட்கரனிடம் தனது இரத்தினமாலையைப் பந்தயமாக வைத்துத் தோற்றான். மேலும் சூதாடித்தன் பணிப்பெண்கள் முதல் தனது அரசு முதலான யாவற்றையும் இழந்தான். ஒருவன் ஏழையாகி விட்டால் எவர் எதை வேண்டுமானாலும் பேசுவது இயல்பு. சூதாடியாகிய புட்கரன் நளனிடம் தமயந்தியையே பணயம் வைத்து ஆடலாமே எனக் கேட்டுவிட்டான்.

மனமுடைந்த நளன் ஏதும் பதில் கூறாமல், தன் மனைவி மக்களையும் அழைத்துக்கொண்டு நாட்டைவிட்டுப் புறப்பட்ட போது நாட்டுமக்கள் கதறினர். ஒருநாள் தங்களுடன் இருந்து போக வேணுமென வேண்டினர். அந்நிலையில் கொடுங்கோலனான புட்கரன் எவரும் நளனுக்கு ஆதரவு காட்டக்கூடாது என முரசு அறைவித்தான். நளன் தன்மனைவிமக்களுடன் காடு வழி நடக்கலானான். அரண்மனை வாயில் தாண்டுமுன் காடு வந்து விட்டதோ எனச் சீதை கேட்டதாக இராமாயணம் கூறுகிறது. அதுபோல காடுபுகுந்ததும் வழி முழுதும் கடந்துவிட்டோமோ? என மக்கள் நளனைக் கேட்டனர்.

சந்தக் கழல்தா மரையும் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி-எந்தாய்!
வடந்தோய் களிற்றாய்! வழியான வெல்லாம்
கடந்தோமோ என்றார் கலுழ்ந்து.

நளனைப் பிரிந்த நாட்டில் தருமம் தடுமாறியது. பொய் நிறைந்தது. பாவம் வளர்ந்தது. துன்மார்க்கம் அதிகமாயிற்று. இராச தருமம் கெட்டது. தவம் குறைந்தது. வஞ்சனை நிறைந்தது என்கிறார் நைடத ஆசிரியர்.

நளன் நுழைந்த காட்டில் மழைபெய்தது. பட்ட மரங்கள் தளிர்த்தன.

தன் மக்கள் காட்டில் கவலைப்படுவது கண்டு நளன் தன் மக்களைத் தன் மனைவியின் பிறந்த வீட்டிற்கு அனுப்பினான். நளனைத் தன்னுடன் வந்து தன் தகப்பன் வீட்டில் வந்து வாழுமாறு அழைக்க, ''தமயந்தி! போரில் புறமுதுகு காட்டியவர், தன் சுற்றம் கவலைப்படத்தான் நல்ல வாழ்வு வாழும் செல்வர், மாமனார் வீட்டில் உணவுண்டு வாழ்பவர் ஆகியவர் பதருக்குச்சமம் என நீதிநூல்கள் கூறும்.

மிக்க வெஞ்சமத்திடை வெருவி ஓடினர்;
ஒக்கல் துன்புறத் தனி உலகில் வாழுநர்;
புக்கு வேட்டகத்தினில் உண்ணும் புன்மையோர்
மக்களுள் பதடி என்றுரைக்கும் வையமே.

நளனும் தமயந்தியும் தனியாகக் காட்டில் வசித்தபோது கலிபுருஷன் அழகிய ஒரு பறவையின் உருவத்துடன் தோன்றினான். தமயந்தி அதைக் கண்டு ஆசை கொண்டாள். நளன் தனது ஆடையை வீசி அப்பறவையைப் பிடிக்க முயற்சித்தபோது அவனது ஆடையை அபகரித்துக் கொண்டு மறைந்தது அப்பறவை. ஒரே ஆடையை

இருவரும் அணிந்து கொண்டனர். ஈருடலும் ஒருயிருமாக இருந்தவர்கட்கு ஆடையும் ஒன்றாகிவிட்டது. இருவரும் ஒரு பாழ் மண்டபத்தில் இரவைக் கழிக்க எண்ணித் தங்கினர். கலியின் சூழ்ச்சியும் விதியின் சதியும் அங்குமேலும் விளையாடின.

பாழ் மண்டபத்தில் தங்கிய கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் கண்டுவருந்தினர். தமயந்தியை நடுக்காட்டில் விட்டுப் பிரிய எண்ணினான் நளன். ஒரே ஆடையில் உள்ள நிலையில் எப்படிப் பிரிய முடியும்? கலிபுருடன் ஒரு வாளாக நளன் எதிரில் கிடந்தான். நளனையும் தமயந்தியையும் பிரிக்க எண்ணிய அவன் சூழ்ச்சி பலித்து விட்டது.

எண்ணிய எண்ணம் முடிப்ப இகல்வேந்தன்
கண்ணியதை அறிந்து காய்கலியும்-
பண்ணுக்குக்
கேளான தேமொழியை நீக்கிக் கிளரொளி
சேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து.

வாள்கொண்டு ஆடையை அரிந்து, தமயந்தியை விட்டு மிக்க துயரத்துடன் காட்டிற்குள் புகுந்தான் நளன். இராமலட்சுமணர் காடு செல்லப்புறப்பட்ட போது அயோத்திமக்கள் ''இவர்களைப் பத்திரமாகப் பாதுகாத்து எமக்குத் திருப்பித்தாருங்கள்- காத்து நல்குமின் தெய்வதங்காள்'' என்றார்களாம். அது போல் நளன் ''காட்டில் வாழும் தேவதைகளே! என் மனைவியைக் காப்பாற்றுங்கள்'' என வருந்தி வேண்டிக் கொண்டே காடு புகுந்தான்.

பொழுது விடிந்தது. நளனைக் காணாது துயரம் கொண்டு அலறினாள் தமயந்தி. ''நான் என்ன குற்றம் செய்தேன்? என் துயரத்திற்கு ஒரு எல்லையே கிடையாதா? ஏன் என்னைவிட்டுச் சென்றீர்?'' என அலறிக் கொண்டே காடு வழி வந்த தமயந்தியை ஒரு மலைப்பாம்பு விழுங்கலாயிற்று. ''பாம்பினிடமிருந்து என்னைக் காப்பாற்ற மாட்டீரா?'' என நளனை அழைத்து அலறினாள். தன் கணவனைக் காணவில்லையே என்ற துயரம். தன் மக்கள் என்ன செய்வார்களோ என்ற ஏக்கம். ''பாம்பினால் விழுங்கப்படும் என் வணக்கத்தை ஏற்றருளக!'' எனக்கணவனை வேண்டினாள்.

அப்போது ஒரு வேடன் தோன்றி பாம்பினைக் கொன்று தமயந்தியைக் காத்தான். ஆனால், விதி வேறு விதமாக விளையாடியது! தவறான எண்ணத்துடன் தமயந்தியை அவ்வேடன் விரட்டிப் பிடிக்க முயல, தமயந்தி அவனை நோக்கிச் சீறி விழித்தாள். வெந்து சாம்பலானான் வேடன்.

திக்கட் புலிதொடரச் செல்லும் சிறுமான்
போல்
ஆக்கை தளர அலமந்து-போக்கற்றுச்
சீறா விழித்தாள்; சிலைவேடன் அவ்வளவில்
நீறாய் விழுந்தான் நிலத்து.

தனியாகப் புலம்பிய தமயந்தியை ஒரு வணிகன் கண்டு அவளைச் சேதி நாட்டரசன் அரண்மனையில் கொண்டு சேர்த்தான். சேதி நாட்டரசி தமயந்திக்குச் சிற்றன்னை முறையாதலின், அவளைக் குண்டின புரத்திலுள்ள அவளது தந்தையின் வீட்டில் சேர்த்தனள். தன் தந்தையின் வீட்டில் தன் மக்களுடன் வசித்த தயமந்தி தனது நாயகனான நளனை எப்போது அடைவோம் என ஏங்கி நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)

# வாசகர் எண்ணங்கள்



அன்புடையீர்,

வணக்கம். திருக்கோயில் திங்கள் வெளியீடு கடந்த காலங்கள் போல் இல்லாமல் புதிய பொலிவோடு சமயமார்க்கத்தினைச் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் வருகிறது. அந்த வகையில் ஆசிரியர் அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த பாராட்டுதலையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப்பெரிய பாரதப் போரினைத் திருமிகு கவிஞர் டாக்டர் த.அமிர்தலிங்கம் அவர்கள் ''பாரதப் போரில் பார்த்தசாரதி'' என்று தொடராக வெளியிட்டார்கள். என்னைப்போல் பல நண்பர்கள் தொடர்ந்து தவறாமல் படிக்க முடியாமல் போய்விட்டது. அதனால் ''பாரதப்போரில்பார்த்தசாரதி'' கட்டுரைத் தொடரை ஒரு நூலாக் வெளியிட வேண்டுகிறேன். என் எண்ணம் ஈடேறுமா? இதைத் தொடர்ந்து இராமாயண காவியத்தையும் தொகுத்து அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

—சி.மு.தேவன், தலைவர், அறங்காவலர் குழு, அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் ஆலயம், பொன்னேரி வட்டம், செங்கை மாவட்டம்.

திருக்கோயிலின் திருவருள் திசை எல்லாம் பரவ
திருப்பெருக்கம் செய்கின்ற உங்களுக்கெல்லாம்
திருவாவினன் குடிப் பெருமான் தினகரனுக்கு
வரமளித்ததுபோல்
திருநிறைச் செல்வத்தை விரைவினில் அருளுமாறு
வேண்டிக் கொள்கிறேன்.

—ஏ.வேல்முருகன், மெய்ஞானபீடம்,
பழநி 624601.

# பழக்கிவ்வியிலை பழந்திருநாமம்

டாக்டர் த. அமிர்தலிங்கம்

அருணகிரிநாதர் மிக அதிகமான திருப்புகழ்களால் போற்றியுள்ள திருத்தலம் பழநிதான். 96 திருப்புகழ்களால் பழநித் திருத்தலத்தையும், அதற்கு அடுத்த எண்ணிக்கையில்-83 திருப்புகழ்களால் திருச்செந்தூரையும், அதற்கு அடுத்த எண்ணிக்கையில் 78 திருப்புகழ்களால் திருவண்ணாமலையையும் அருணகிரிநாதர் போற்றியுள்ளார்.

பிறக்க முத்தித்தரும் திருத்தலம் திருவாரூர். நினைக்க முத்தித்தரும் திருத்தலம் திருவண்ணாமலை. தரிசிக்க முத்தித்தரும் திருத்தலம் சிதம்பரம். இறக்க முத்தித்தரும் திருத்தலம் காசி. இத்திருத்தலங்கள் நான்கினையும் முத்தித் திருத்தலங்கள் என்று குறிப்பிடுவர். ''காசியில் மீறிய பழனாபுரி'' ''பதிநால் உலகோர் ஏத்தும் பழனாபுரி'' ''அதிசயம் அநேகமுற்ற பழநி'' என்று அருணகிரி நாதர் தம் திருப்புகழ்ப் பாக்களில் போற்றியிருப்பதால் முத்தித் தலங்கள் நான்கினை விடவும் முதன்மை பெற்ற திருத்தலம் பழநியே என்பது புலனாகும்.

பழநித் திருத்தலம் மூர்த்தி, தீர்த்தம், தலம் எனும் மூன்றாலும் கூட முதன்மை மிக்க தலமே.

''அண்ணலம் பதிகள் தம்முள்
ஆவினன் குடியே ஆகும்
தண்ணரும் நதிகள் தம்முள்
சண்முக நதியே போற்றும்
எண்ணரும் தேவர் தம்முள்
முருகனே ஏற்றம் என்னா
நண்ணியிப் பதியில் ஆடி
நவின்றருச் சிப்பர் முத்தர்.''

இப்பாடலால் பதிகளில் சிறந்தது திருஆவினன் குடியாகிய பழநி என்பதும், நதிகளில் சிறந்தது சண்முக நதியாவதும், தெய்வங்களில் சிறந்தவர் முருகர் என்பதும் தெளிந்து கொள்கிறோம். முத்தர்களும் முந்திவந்து முதற்கடவுளாம் முருகனைப் பழநியம்பதியில் தரிசித்து வணங்குகின்றனர்.

திருஆவினன் குடி எனும் பெயரும் தெய்வங்களும் வணங்கும் முதல் தெய்வமாக முருகர் திகழும் பெருமையை உணர்த்துகிறது. திருமகளும் (திரு) காமதேனுவும் (ஆ) சூரியனும் (இனன்) பூமியும் (கு) அக்கினியும் (டி) பழநிக்கு வந்து பழநி முருகனை வழிபட்டே தமக்குரிய ஆற்றலைப் பெறுகின்றனர் என்பதனால் பழநித் திருத்தலத்திற்கு திரு ஆவினன்குடி என்பதும் ஒரு பெயராக அமைந்து விளங்குகின்றது. ''மெய்கண்ட தெய்வம் இத்தெய்வம் அல்லால் வேறில்லை'' என்பது மெய்யான வார்த்தையே ஆகும்.

உலகெங்குமுள்ள புண்ணியத் தலங்கள் எல்லாவற்றையும் வாழ்நாள் முழுதும் தரிசித்து வணங்கினால் பெறக் கூடிய திருவருளைப் பழநித் திருத்தலத்தில் ஒரே ஒரு நாள் முருகனைப் பூசிப்பதன் மூலம் பெற்றுவிட முடியும்.

''கந்தனின் பூசை ஓர்நாள்
கடிநகர் இதனில் ஆற்றில்
இந்தமா ஞாலம் ஆதி
புவனங்கள் தொறும் எஞ்ஞான்றும்
வந்தனைப் புரியில் உண்டாம்
பலனெய்தும் மனமொன் றிங்கன்
சிந்தனை புரியில் ஓரேழ்
கோடியும் சித்தி யாமால்''

என்ற பாடலைக் காண்க.

முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆறு படை வீடுகளில் மூன்றாம் படை வீடாகத் திகழ்வது பழநி. எனினும் தமிழகத் திருத்தலங்களில் முதன்மை பெற்ற திருத்தலமாகப் பழநியே திகழ்ந்து வருகிறது.

முருகனின் முதற்படைவீடான திருப்பரங்குன்றம் முருகர் தெய்வானையை மணங்கொண்ட திருத்தலம். இரண்டாம் படைவீடான திருச்செந்தூர் வியாழபகவான் வணங்க முருகர் கோயில் கொண்ட திருத்தலம். நான்காம் படை வீடான சுவாமிமலை பரமனுக்கே முருகர் பிரணவப் பொருளை எடுத்துரைத்த திருத்தலம். ஐந்தாம் படைவீடான திருத்தணி முருகர் வள்ளியை மணம்புரிய எழுந்தருளிய திருத்தலம். ஆறாம்படை வீடான பழமுதிர்ச்சோலை ஔவைக்கு முருகர் ''சுட்டப்பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?'' என்று அறிவுறுத்திய திருத்தலம். இத்திருத்தலங்களை போற்றுவனவாக அமைந்துள்ள ஐந்து பாடல்களையும் ஈங்குப்படித்து மகிழலாம்.

''பெய்து நீர் வார்த்தும் உன்சீர்
போற்றிடும் விண்ணோர் வேந்தன்
தெய்வநல் யானை என்னும்
தாழ் குழல் பொன்கை சேர்ப்பச்
செய்தவத் தூயோர் பெற்ற
கண்ணிணைப் பயனாய் காணச்
செய்தனை மணமும் போற்றும்
தென்பரங்குன்றம் போற்றி''

''வெற்றியும் திருவும் மேன்மேல்
பெற்றிட விழைந்தே வேலோய்
சுற்றமாம் படைகள் சூழச்
சமர்அடச் செல்லும் பாதை
கற்றவர் வியாழர் வந்து
வணங்கிடக் கோயில் கொண்ட
நற்றலம் செந்தில் நாளும்
பாடுவோம் நாவால் போற்றி''

''தருக்கினால் தலைவ ணங்கா
பிரமனைச் சிறையில் சேர்த்து
விருப்பினால் படைக்கும் வேலை
வடிவுறச் செய்தாய் ஞானப்
பரமனும் ஒதுங்கி நின்று
பிரணவப் பொருளைக் கேட்ப
உரைத்தனை சுவாமி நாதா
ஏரகம் தொழுவோம் போற்றி''



**பழநி-தங்கமயில் முருகர்**

''வானவர் வணங்கி வேண்ட
அவுணரை வென்ற வீர!
கானவர் மகளின் மீதில்
கொண்டதாம் அன்பில் வேண்டி
ஆனைநல் முகத்தின் அண்ணல்
வந்தருள் புரிந்து வாழ்த்த
ஆனதுன் மன்றல் போற்றும்
திருத்தணிக் குன்றம் போற்றி''

''கனிமொழி ஔவை பாட்டி
கருத்திலும் விந்தை ஊட்டிக்
கனிகளில் குளிரும் காயும்
கனியிரு வகையாம் என்று
கனிவுடன் சங்கம் ஏறிக்
கனிதமிழ் காத்தோய் வாழும்
கனிமுதிர்ச் சோலைக் கோயில்
கண்களால் காண்போம் போற்றி''.

இவ்வாறு திருப்பரங்குன்றம். திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை ஆகிய திருத்தலங்கள் முருகர் தமக்காகவும், தம்மை வேண்டிய - வணங்கிய சிலர்க்காகவும் கோயில் கொண்ட திருத்தலங்களாகத் திகழ, பழநித் திருத்தலம்தான் பக்தர்கள் எல்லோருக்குமாக எழுந்தருளிய திருத்தலமாகத் திகழ்கிறது.

முருகர் பழம் காரணமாக எழுந்தருளிய திருத்தலம் பழம் நீ - பழநி என்றாயிற்று எனக் கூறப்படும வரலாறு உண்டு. எனினும் முருகனே ஞானப் பழம் ஆனவன். அவன் தனக்குப் பழம் கிட்டவில்லை என்று கோபம்கொண்டு பூவுலகிற்கு எழுந்தருளினான் என்பது தவறு. பழத்தைக் காரணமாகக் கொண்டு உலகமக்கள் அனைவருக்கும் உய்வு நல்கவே பழநியில் எழுந்தருளினான் என்பதே நாம் தெரிந்துணர வேண்டிய உயர்கருத்தாகும்.

''பிரணவப் பொருளைக் கூறும்
சரவண அறிவாய் ஈன்ற
இருவரும் அன்றோ ஞாலம்
ஆயினும் அன்பால் முன்னோன்
அருந்தவே கனியைத் தந்து
சிறந்திடும் விழைவால் நீயே
விரும்பிழு வுலகும் சுற்றி
வந்தனை உயிரே போற்றி''

''அன்பினால் ஆண்டி யாகிச்
சினமென நடிப்பைக் காட்டி
மன்பதை வாழும் மாந்தர்
கண்டுமே நாளும் போற்றப்
பொன்மனம் கொண்ட வேலோய்
இன்புற வந்திங் கேறும்
தென்திருப் பழநிக் குன்றம்
தெண்டனும் செய்வோம் போற்றி''.


எனவரும் பாடல்களால் உலகமக்களுக்குத் தரிசனம் தந்து வரங்களை வழங்கவே முருகன் பழநிக்கு எழுந்தருளியமை தெளிவாகிறது.

இதே கருத்தைக் தண்டபாணிப் பதிகமும் வற்புறுத்துகிறது. உலக மக்களின் வினைகளைத் தீர்த்துக் காக்கவே முருகர் பழநிக்கு எழுந்தருளினார். மற்றபடி மாந்தர்தம் மனக்குறையை நீக்கிட வல்ல முருகருக்கு ஏதும் மனக்குறை இருக்கவில்லை என்பதாகக் கூறும் நயமிகும் அப்பாடல்ரசத்தை நாமும் இங்கே பருகி இன்புறுவோமாக.

''ஞானப் பழத்தைப் பிழிந்துரச மன்பினொடு
நாமுண்ணவுங் கொடுத்த
நல்லகுரு நாதனுக்கு என்னவிதம் இக்கனியை
நாமீவது என்று நாணித்
தான் அப் பனித் தலையர் தரவில்லை ஆதலால்
சாருமொரு பிழையில்லையே
சக்திவடி வேலொடுந் தத்து மயிலேறிடும்
சண்முகா குறையும் உளதோ?
ஏனிப்படி கோவணத் தொடுங் தண்டுகொண்டு
இங்குற்றோர் ஆண்டி யானாய்
எமதுவினை பொடிபடவும் அல்லவோ வந்துநீ
இப்படி இருக்கலாம்ஆ
சானப்பன் என்னையன் என்னவும் எண்ணினேன்
தருவையருள் பழநி மலையில்
சந்ததம் குடிகொண்ட சங்கான் கும்பிடும்
தண்டபாணித் தெய்வமே''.

எனும் இப்பாடலில் முருகர் பழநிக்கு எழுந்தருளிய காரணம் ''எமது வினை பொடிபடவும் அல்லவோ வந்து நீ இப்படி இருக்கலாம்'' எனத் தெளிவு படுத்தப்பட்டிருப்பது காணலாம்.

பழநியில் ஆண்டிக்கோலம் பூண்டிருக்கும் முருகரின் கருணையேகருணை. முருகர் தமக்கொன்றும் வேண்டாதவர், தம்மிடம் உள்ள எல்லாமும் பக்தர்களுக்கே உரிமையாக்கும் வான் கருணை பூண்டவர்; அதை உணர்த்துவதே பழநி முருகரின் ஆண்டிக் கோலம். பக்தர்கள் எந்நேரமும் எவ்வித தடைகளும் இன்றி வந்து அவரை வணங்கிடும் பொருட்டே ஆண்டியாகத் திகழ்கிறார். அவருடைய ஆண்டிக் கோலத்தின் அருமை நலத்தை அறியாமல் சில மெய்யன்பர்கள் பழநிக்குச் சென்றால் ஆண்டிக் கோலத்தைத் தரிசித்துக் திரும்பக் கூடாது. அவ்வாறு திரும்பினால் கஷ்டங்களே உண்டாகும். முருகரின் இராஜ அலங்காரம் பார்த்த பிறகே வீடு திரும்ப வேண்டும் என்று கூறுவது உண்டு. அவர்கள் முருகரின் ஆண் கோலப் பெருமையை அறியாதவர்கள் பூஜை கீழ் பூஜையும் வரும் பாடல் தெரிவிக்கிறது.



பழநி — வள்ளி தெய்வயானையருடன் ஆறுமுகர்

''ஆண்டி ஆண்டி என்றுன்னை
அழையா நிற்பர் மெய்யர் சிலர்
ஆண்டிக் கோலத் தருமைநலம்
அன்னார் முழுதும் அறிவாரோ?
தோண்டித் தோண்டும் நீர்க்கேணி
சுரக்கும் நீர்போல் நின் கருணை
வேண்டித் தொழுவேன் பழநிமலை
வேலா என்னைக் காத்தருளே''.

முருகப் பெருமானின் வான்கருணை என்றும் வற்றாமல் பொழியக் கூடியது என்பதை இப்பாடல் நமக்குத் தெரிவிக்கிறது. ஆகவே பழநிக்குச் சென்று வழிபடும் பக்தர்கள் ஆண்டிக் கோலத் தரிசனம் துன்பம் தருமோ என்று அஞ்ச வேண்டுவதில்லை. முருகரைப் பழநியில் எக்கோலத்தில் தரிசித்தாலும் தரிசித்தவர்கள் எக்காலமும் வையத்தில சகல சௌபாக்கியங்களும அனுபவித்துப் பிறவிப் பிணி நீங்கி அவருடைய திருவடிப் பேற்றையும் பெறுவர் என்பதற்கு யாதொன்றும் ஐயமில்லை.

முருகப் பெருமானின் தாயார் மலைகளுக்கு அரசனான பர்வதராசன் புத்திரியாகிய பார்வதி; முருகப் பெருமானின் தந்தை பொருள்களுக்கெல்லாம் அதிபதியான குபேரனைத் தோழனாகக் கொண்ட சிவபெருமான். முருகரின் தாய்மாமன் கடல்வண்ணனும், கடல்மேல் பள்ளி கொண்டிருப்பவனுமாகிய பரந்தாமன். மாமி அட்டஐஸ்வரியங்களுக்கும் தெய்வமான திருமகள். மூவுலகையும் ஆளக்கூடிய தேவேந்திரன் முருகருக்குத் தெய்வயானையை மணம்செய்தளித்த மாமன். இவ்வளவு சிறப்பிற்கும் செல்வத்திற்கும் அதிபதியான முருகப் பெருமான் ஆண்டிக் கோலம் பூண்டு பழநியில கோயில் கொண்டு விளங்குவது உலக மாந்தரை உய்வித்தருளும் பொருட்டே என்பதைக் கீழ் வரும் தண்டபாணித் பதிகப் பாடலால் நாம் அறிந்து மகிழலாம்.

''பொன்மயக் கிரிபெற்ற புதல்வியோ அன்னையாம்
பொருளுக்கோர் அதிபதி எனும்
புட்பக விமானத்தனைத் தோழனாய்க் கொண்ட
புங்கவனுமுன் தந்தையாம்
கன்மலை குடைகொண்டு மழைத்தடுத்தன்று நிரை
காத்தவொரு கடல்வண்ணனோ
கருதுதாய் மாமனாம் பெரிய தனமேந்திடும்
கமல மாதுன் மாமியாம்
பன்மலர் தொடைபூண்டு மூவுல காள்பவன்
பார்க்கிலொரு பெண் தந்தவன்
பாரிலிப் பெருஞ் செல்வம் உற்றும் நீ கோவணப்
பண்டாரமாய் வருவதேன்?
சென்ம வெப்புப்பிணி அகற்றுமுயர் சஞ்சீவி
த[illegible]ரு பழநி மலையில்
[illegible] அடிபரவ ஒரு பொருளுதவு
பெற்றுவி[illegible] தெய்வமே!''.

பிறவிப் பிணியோடு உடலுக்கு வரக்கூடிய பிணிகளையும் அகற்றவல்லது பழநி மலையே ஆகும். பழநிமலையில் வீசிக்கொண்டிருக்கும் சஞ்சீவிக் காற்றின் மகிமையால் தீராத பிணிகள் யாவும் தீர்ந்துவிடும். பழநிமலைமேல் கோயில் கொண்டிருக்கும் தண்டாயுதபாணி மகிமையால் தீராத வினைகள் யாவும் தீர்ந்துவிடும்.

இத்தகைய பழநி முருகனின் நாமத்தை நாளும் படித்து உருக வேண்டும்; தாம் படித்து உருகாவிடினும் படித்து உருகுகின்ற உயர் பக்தர்களின் திருவடிகளைப் பணிந்து தலைமேல் சூடிக் கொள்ள வேண்டும். பழநி முருகா பழநிமுருகா என்றே அவன் நாமத்தை நாளும் ஜெபிக்க வேண்டும். பழநி முருகரின் பக்தர்களுக்கு அமுது அளித்து அவ்வாறு அளிப்பதனால் வறுமை வருமாயின் அவ்வறுமையினை வேண்டி இரந்து பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருட் செல்வத்தினும் மேம்பட்ட பழநிமுருகனின் அருட்செல்வமே வேண்டுமென விம்மி விம்மிப் பரமானந்தம் மேற்கொள துடிக்காத - நடிக்காத நெஞ்சங்களுக்கு உய்வே இல்லை என்பதைத்தான் அருணகிரி நாதர் தம் கந்தர் அலங்கார நூலில்

''படிக்கின்றிலைப் பழநித் திருநாமம் படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமல்இட்டு
மிடிக்கின்றிலை பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே''
என்று பாடியிருக்கிறார்.


பழநி முருகனைப் போற்றிடுவோம்.
பழவினைகளை மாற்றிடுவோம்.

# திருக்குளத் திருப்பணி

திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகில் உள்ள திருப்பெருந்துறை அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயிலில் உள்ள தீர்த்தமாம் பொய்கை எனும் திருக்குளத்தை 18.6.88 மற்றும் 19.6.88 ஆகிய இரு நாட்களிலும் தூர் எடுத்து சுத்தம் செய்யும் பணி தவத்திரு சுந்தரசுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தப் பணியில் காஞ்சி தொண்டை மண்டலம் ஆதீனகர்த்தர் மற்றும் அன்பர்களும் கோவில்பட்டி மற்றும் ஈரோடு திருமுறை மன்றத்தார்களும் கலந்து கொண்டார்கள். மேலும் ஈரோடு மு.அழகப்பன் அவர்களும் துறைசை ஆதீன சிப்பந்திகள் மற்றும் உள்ளூர் பொது மக்களும் பெண்களும் பணியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மேற்படி பணியில் ஈடுபட்ட அனைவரும் உணர்ச்சி பூர்வமாக செயல்பட்டார்கள். அனைவருக்கும் சிறந்த முறையில் மூன்று வேளை உணவு வழங்கப்பட்டது. 19.6.88 மாலை 4 மணி அளவில் தொண்டை மண்டல ஆதீனகர்த்தர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் துறைசை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் ஆதீனம் சார்பில் திருவாசகம் (எட்டாம் திருமுறை) புத்தகங்கள் பணியில் கலந்து கொண்டு சிறந்த முறையில் பணியாற்றிய அன்பர்களுக்குத் தவத்திரு சுந்தரசுவாமிகள் வழங்கி, ஆசியருளினார்கள். திருவாடுதுறை ஆதீனம் தம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஈரோடு கயிலைமுனி திரு.மு.அழகப்பன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். ஆதீன மேலாளர் டி.எஸ்.ஆறுமுகம் நன்றி கூற விழா முடிவுற்றது.

# பழநித் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா வைபவம்

**- செவ்வேள் -**




பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில் அருள்மிகு பழனி ஆண்டவர் அட்டபந்தன திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 27.6.1988 திங்கட்கிழமை, சுக்கில பட்சமும், திரயோதசி திதியும், அனுச நட்சத்திரமும், சித்த யோகமும் சந்திர நல் ஓரையும் கூடிய நன்னாளில் காலை 6.15 மணி அளவில் தொடங்கி இனிதே நிறைவேறியது.

அருள்மிகு பழநியாண்டவர் திருக்குட நீராட்டு விழாவைக் கண்டு பயனடைய தமிழகத்தின் பல ஊர்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பழநிக்குத் திரண்டு வந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும் வேண்டிய போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் சிறப்புறச் செய்யப்பட்டிருந்தன.

மலைக்கோயிலின் மீதிருந்து 9000 பக்தர்கள் மட்டுமே திருக்குட நீராட்டு விழாவை நேரில் தரிசிக்க முடியும் என்பதைக் கணக்கிட்டு நம் அறநிலையத்துறை 9000 அடையாள அட்டைகளை பக்தர்களுக்கு வழங்கியது. அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்ட பக்தர்கள் 27.6.88 விடிகாலை ஒரு மணியிலிருந்தே மலைக்கோயிலுக்கு வந்து, திருக்குட நீராட்டினைக் காணும் ஆர்வத்தோடு அனைவரும் பக்தி பரவசத்துடன் வீற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. திருக்குட நீராட்டு விழாவைத் தரிசிக்க கோவை கௌமாரமடாலயத்தின் தலைவர் தவத்திரு சுந்தர சுவாமிகளும், வடலூர் தவத்திரு ஊரன் அடிகளும் வந்திருந்தனர்.

யாகசாலை பூஜை 23.6.88 வியாழன் இரவு 8 மணிக்குத் தொடங்கப்பட்டிருந்தது. பழநியாண்டவருக்கு 39 யாக குண்டங்களும், மற்ற தெய்வங்களுக்கு 40 யாக குண்டங்களும் ஆக மொத்தம் 79 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 23.6.88 அன்று இரவு 11.00 மணிக்கு முதல் கால பூர்ணாகுதியும் 24.6.88 காலை 11.00 மணிக்கு 2ஆவது கால பூர்ணாகுதியும் அதேநாள் இரவு 9.30 மணிக்கு 3வது கால பூர்ணாகுதியும் 25.6.88 காலை 11.30 மணிக்கு 4வது கால பூர்ணாகுதியும், அன்றிரவு 9.30 மணிக்கு ஐந்தாவது கால பூர்ணாகுதியும், 26.6.88 காலை 11.30 மணிக்கு 6வது கால பூர்ணா.குதியும், இரவு 9.30 மணிக்கு ஏழாவது கால பூர்ணாகுதியும் நிறைவேறின. யாகசாலை ஆரம்பமுதலே வேதசிவாகமப் பாராயணங்களும், திருமுறைப் பாராயணங்களும் வல்லுநர்களால் தொடர்ந்து ஓதப்பட்டு வந்தன. 81 ஓதுவாமூர்த்திகள் திருமுறைப் பாராயணத்தில் பங்குகொண்டனர்.

27.6.88 திங்கட்கிழமை அதிகாலை3.30மணிக்கு மீண்டும் யாகசாலைப் பூஜைகள் தொடங்கப்பட்டன. 179 சிவாச்சாரியார்கள் கங்கை, யமுனை, கோதாவரி, காவிரி, சண்முகதீர்த்தம் முதலான அனைத்து நதிகளிலிருந்தும் கொண்டுவரப்பட்ட புண்ணிய தீர்த்தங்களைப் புனித கலசங்களில் சேகரித்து ஓமகுண்டங்களைவளர்த்து பூஜைகளைச் செய்தனர். 5 மணிக்குப் பரிசாகுதி பூஜையும் 5.15



**பழநி மலையின் எழில்மிகு தோற்றம்**

மணிக்கு மகாபூர்ணாகுதி பூஜையும், யாத்ரதானமும் செய்யப்பட்டது. 5.30 மணிக்கு மேளதாளங்கள் முழங்க புனிதநீர்க் கலசங்கள் கோபுரங்களுக்குக் கொண்டுவரப்பட்டன. 6.18 மணிக்கு இராஜகோபுரம், தங்ககோபுரம் உள்பட 27 கோபுரக் கலசங்களுக்கு ஏககாலத்தில் திருக்குட நீராட்டு நடைபெற்றது. திருக்குட நீராட்டு நிகழ்ந்த புனித நேரத்தில் இரண்டு கருடன்கள் கும்பாபிசேகத்தை வாழ்த்துவதைப்போல் சுமார் 15 நிமிடநேரம் வானில் வட்டமிட்டு வளைய வந்தது குறிப்பிடத்தக்கது.

திருக்குட நீராட்டு நிகழ்ந்தபின் கலசங்களுக்குச் சிவாச்சாரியர்கள் பட்டாடை அணிவித்துக் கற்பூர ஆராதனை காட்டினர். ''பழநியாண்டவருக்கு அரோகரா'' ''தண்டாயுதபாணிக்கு அரோகரா'' என்று பக்தர்கள் அப்பொழுது பக்தி பரவசத்தோடு முழங்கினார்கள். அப்பொழுது ஆலயத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குட்டி விமானம் ஒன்று பதினோருமுறைகள் மலைக் கோயிலை சுற்றிச் சுற்றிவந்து மலர்மாரி பொழிந்தது.

காலை 7 மணிக்கு மூலவருக்குப் புனித நீர் கொண்டு மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. 8 மணிக்கு எஜமானர் உற்சவமும் 8.30 மணிக்குச் சர்வ தரிசனமும் நடைபெற்றது. திருக்குட நீராட்டு விழா காண வந்திருந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கும் திருக்கோயிலார் இலவசமாக லட்டுப் பிரசாதம் வழங்கினர்.

பழநியாண்டவருக்கு அன்று மாலை 4 மணிக்கு மகாபிசேகம் ஆரம்பமானது. மகாபிசேகத்திற்குப் பின் 5 மணிக்குத் தீபாராதனை காட்டப்பட்டு 6 மணிக்குச் சண்முகர் திருக்கல்யாணமும் நடத்தப் பெற்றது. இரவு 8 மணிக்குத் திருவீதி உலாவுடன் திருக்குட நீராட்டு விழா இனிதே நிறைவேறியது.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் அறிவுரைகளுக்கு இணங்க ஆளுநரின் ஆலோசகர் திருமிகு ஆ.பத்மநாபன் ஐ.ஏ.எஸ். அவர்களும் அறநிலையத்துறைச் செயலர் திருமிகு கு.ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ். அவர்களும் கும்பாபிசேகத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் சிறப்புறச் செய்து, கும்பாபிசேகத்தையும் முன் இருந்து நடத்தி வைத்தனர். நம் அறநிலையத்துறை ஆணையாளர் திரு.தி.இராச.கல்யாணசுந்தரம் ஐ.ஏ.எஸ். அவர்கள் பழநிக்கு முன்னதாகவே வருகை புரிந்து தாமே முன்னிருந்து, ஆலய நிர்வாக அதிகாரியும் இணை ஆணையாளருமான திரு.ஆ.மலையாண்டி பி.ஏ.பி.எல். அவர்களுக்கும், கும்பாபிசேகத்தை ஒட்டிச் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டடிருந்த பிற அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் அவ்வப்போது வேண்டிய உத்தரவுகளை வழங்கித் திருக்குட நீராட்டுவிழா மிகச் சிறப்பாக நடந்தேற ஆவனச் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மிருத்யுஞ்சய் சாரங்கி ஐ.ஏ.எஸ். அவர்களும், அண்ணா மாவட்ட இதர உயர் அரசு அதிகாரிகளும் வேண்டிய ஒத்துழைப்பினை நல்கித் திருக்குட நீராட்டு விழாவின் வெற்றிக்கு உறுதுணை புரிந்தமையும் குறிப்பிடத்தக்கது. ∇

# அடுத்த இதழில்

''பாரதப் போரில் பார்த்தசாரதி'' கட்டுரைத் தொடரைப் படித்து மகிழ்ந்த வாசகர்களின் அன்புக் கட்டளைக்கிணங்க ''திருக்கோயில்'' ஆசிரியர் எழுதும்,

## " கம்பரின் இராமாவதாரம் "

காவியத் தொடர் அடுத்த இதழில் தொடங்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-6000 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002











அறநிலையத்துறை
அரசுச் செயலாளர்
திருமிகு
கு. ஆளுடையபிள்ளை,
ஐ.ஏ.எஸ்.
அவர்களும்
அறநிலையத்துறை
ஆணையாளர்
திரு தி.இராச கல்யாண
சுந்தரம், ஐ.ஏ.எஸ்.
அவர்களும்
இவ்விழாவில்
கலந்து கொண்டனர்.



மயிலை அருள்மிகு
கற்பகாம்பாள்
கல்யாண மண்டபத்தில்
29-7-88 அன்று
ஓதுவார்கள்
ஓய்வூதியத் திட்டம்
மேதகு
தமிழக ஆளுநர்
டாக்டர்
பி.சி. அலெக்ஸாண்டர்
அவர்கள்
துவக்கி வைத்தார்.
மேதகு
தமிழக ஆளுநரின்
ஆலோசகர்
திருமிகு
ஆ. பத்மநாபன்,ஐ.ஏ.எஸ்.
தலைமை தாங்கினார்.

பதிவு எண். எம் 7039

